கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

# ஞான ஒளி

ஞான ஒளி
GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05



சிறுவர் தினம்
தேவத்தை
01.03.2014


பக்கம் 04
மரியன்னைக்கு நாங்கள்...


பக்கம் 06
குழந்தைகள் முன்னிலையில்


பக்கம் 12
பனிமய மாதா ஆலயம்...

16.02.2014 - (16 மாசி, 2014 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 04, கதிர் - 81 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 37 / NEWS / 2014

# நம்பிக்கை மூலமே சமாதானத்தையும், அபிவிருத்தியையும் அடைய முடியும்

## இத்தாலியில் இலங்கை வாழ் மக்களுடன் திருத்தந்தை

இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற-போது 1946ஆம் ஆண்டில் எமது இலங்கை நாட்டை யுத்தத்தில் இருந்து காப்பாற்றுமாறு அமல மரி தியாகிகள் சபையைச் சேர்ந்த அந்நாள் பேராயர் Jean Marie Mason ஆண்டகை அவர்கள் அன்னையை நோக்கி மன்றாடினார். இலங்கை நாட்டை எதுவித ஆபத்துமின்றி காப்பாற்றி தந்தால் அன்னை மரிக்கென்று ஒரு திருத்தலம் கட்டுவதாக உறுதியளித்தார். அதேபோல் இலங்கையும் எதுவித பாதிப்புமின்றி காப்பாற்றப்பட்டது. அதற்கு நன்றியாக கட்டப்பட்டதுதான் ராகமை தேவத்தையில் அமைந்துள்ள அன்னை மரியின் திருத்தலம். ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன் அன்னைக்கு இவ்வாலயம் அர்ப்பணிக்கப்பட்டது.

இந்நிகழ்வை முன்னிட்டு எமது பேராயர் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில்



மேதகு ஆயர் ஹெரல்ட் அன்தனி பெரேரா ஆண்டகை (புலம்பெயர்ந்தோருக்கு பொறுப்பாளர்), மேதகு ஆயர் வின்சன்ட் பர்னாந்து (பதுளை மறைமாவட்டம்), மேதகு ஆயர் வெலன்ஸ் மெண்டிஸ் (சிலாப மறைமாவட்டம்), மற்றும் புலம்பெயர்ந்தோருக்காக சேவையாற்றும் குருக்களும், இத்தாலி வாழ் இலங்கை மக்களுடன் இணைந்து ஆண்டவருக்கு நன்றி கூறும் முகமாக வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் 08.02. 2014 சனிக்கிழமை திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். இத்திருப்பலியின் பின் பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்தாலிய இலங்கை வாழ் மக்களை பேதுரு பேராலயத்தில் சந்தித்து உரையாற்றினார். அண்மை ஆண்டுகளில் இலங்கையில் இடம் பெற்ற உள்நாட்டு மோதல்கள் பலரின் இறப்புகளுக்கும், பெரும் சேதங்களுக்கும், பலர் கண்ணீர் சிந்தவும், காரணமாகியுள்ளது. நீங்கள் அனுபவித்த காயங்களைக் குணப்படு-த்துவதும், நேற்றைய பகைவர்களோடு ஒத்துழைத்து நாளைய தினத்தை ஒன்றிணைத்து கட்டி எழுப்புவது என்பது எளிதானதல்ல, என்பதை நான் அறிந்துள்ளேன். எனினும் இதில் இருந்து மீண்டு, ஒத்துழைப்பதே வருங்கா-லத்துக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும், அமைதிக்கும் நம்பிக்கை அளிக்கிறது என்று கூறினார் திருத்தந்தை.

மேலும் அவர் உரையாற்று-கையில் இலங்கை வாழ் மக்களுக்கு

» தொடர்ச்சி 15ம் பக்கம் «

## வாழ்த்துகிறோம்



மேதகு ஆயர் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை



மேதகு ஆயர் மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை

கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர்களான மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை, மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை ஆகியோர் தமது ஆயர் திருநிலைப்படுத்தலின் ஈராண்டு நிறைவை 11.02.2014 அன்று கொண்டாடினர். இவர்களின் பணி வாழ்வு மேலும் சிறந்து விளங்கவும், அவர்கள் உடல், உள சுகத்துடன் வாழ இறையாசீரை பெறவேண்டி ஞான ஒளி வாழ்த்துகின்றது.

## தேவத்தை சிறுவர் தினம் 2014

கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்க சிறார்களுக்காக வருடந்தோறும் நடாத்தப்படும் சிறுவர் தினம் 01.03.2014 சனிக்கிழமை பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் சிறப்பிக்கப்படுகின்றது.

காலை 8.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பிக்கப்பட்டு பின் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். அதன்பின் மரியன்னை ஆண்டை கருப்பொருளாகக் கொண்டு தேவ அழைத்தலுக்குரிய பாசறையையும் கண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



**தகவல் : அருட்பணி. மனோகுமரன் நாகரட்ணம்**
**தமிழ்ப்பகுதி பொறுப்பு இயக்குனர்**



கத்தோலிக்க விசுவாசத்தையும், பாரம்பரியத்தையும் கட்டிக்காத்து அவற்றை ஆழப்படுத்தும் நோக்கத்தில், லூர்து அன்னை மரியா விழாவான 11.02.2014 செவ்வாயன்று தொடக்கம் கத்தோலிக்கத் தமிழ்த் தொலைக்காட்சியின் ஒளிபரப்புத் தொடங்கியுள்ளது.

மாதா டி.வி என்ற பெயரில் செவ்வாய் இந்திய நேரம் காலை 5.00 மணிக்குத் தொடங்கிய இந்தத் தொலைக்காட்சி உலகம் முழுவதும் வாழ்கின்ற....

» » தொடர்ச்சி 15ம் பக்கம் «

**இவ்வருட தவக்காலம் வருகிற 05.03.2014 புதன்கிழமை அன்று ஆரம்பமாகிறது**

05.03.2014
திருநீற்றுப் புதன்

17.04.2014
பெரிய வியாழன்

18.04.2014
பெரிய வெள்ளி

20.04.2014
உயிர்ப்பு ஞாயிறு

## கொழும்பு உயர் மறைமாவட்ட புதிய நியமனங்கள்

**அதிவண. ஐவன் பெரேரா – ஆன்மீக குரு**
திருமண வாழ்வின் ஆய்வு அமைப்பு

**அருட்தந்தை நிலந்த செகான் பர்னாந்து – ஆன்மீக குரு**
கிறிஸ்தவ குடும்ப அமைப்பு

**அருட்தந்தை சுதத் J. சில்வா**
பங்குத்தந்தை - புனித அந்திரேயா ஆலயம், முகத்துவாரம் கொழும்பு - 15

**அருட்தந்தை டட்லி சப்பிரமாது [அ.ம.தி] – பங்குத்தந்தை**
அருளாளர் ஹியூகோ ஆலயம், புருளபிட்டிய

**அருட்தந்தை ரோஷன் ஜானக்க பர்னாந்து –**
பதில் பங்குத்தந்தை - புனித பிரான்சிஸ் டி சாலஸ் ஆலயம், தளுகம, களனி

**அருட்தந்தை தினுஷ்க கயான் வின்சன்ட்**
புனித யூட் ஆலயம், குரணை

**அருட்தந்தை ராஜ் சில்வா** - விடுமுறையில்

**தகவல் : அருட்தந்தை யூட் சமந்த பர்னாந்து**
**செயலர்**
**கொழும்பு உயர் மறைமாவட்டம்**

**ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர் (திபா 119)**

# கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தனியார் பாடசாலைகளில், தரம் 01ல், 2015ஆம் ஆண்டு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்குதல் தொடர்பான விபரம்

2015ம் ஆண்டில், கொழும்பு உயர் மறைமாவட்டத்தில உள்ள கத்தோலிக்க தனியார் பாடசாலைகளில் விண்ணப்பப்படிவங்கள் பின்வருமாறு வழங்கப்படும்

| | பாடசாலையின் பெயர் | திகதிகள் | நேரம் |
|---|---|---|---|
| 01 | திருச்சிலுவை கல்லூரி - களுத்துறை மற்றும் பயாகலை | பங்குனி 3 மற்றும் 4ஆம் திகதிகள் | காலை 8.00 - 12.00 மணிவரை |
| 02 | புனித தோமையார் சர்வதேச கல்லூரி - சீதுவ | பங்குனி 3 தொடக்கம் 8ஆம் திகதிகள் | காலை 8.00 - 12.00 மணிவரை |
| 03 | ஆவேமரியா கிளைப்பாடசாலை, போலவலானை, நீர்கொழும்பு | பங்குனி 6 மற்றும் 7ஆம் திகதிகள் | பி.ப 12.30 - 3.00 மணிவரை |
| 04 | புனித பிரிஜட் கல்லூரி கொழும்பு - 07 | பங்குனி 10 மற்றும் 11ஆம் திகதிகள் | காலை. 8.30 - 9.30 மணிவரை |
| 05 | புனித சூசையப்பர் கிளைக் கல்லூரி, கடோல்கலே,நீர்கொழும்பு | பங்குனி 10 தொடக்கம் 14ம் திகதிகள் | காலை. 8.30 - 1.30 மணிவரை |
| 06 | மாரிஸ்டெலா கல்லூரி நீர்கொழும்பு | பங்குனி 15 | காலை 8.00 - 10.00 மணிவரை |
| 07 | புனித பெனடிக்ட் கல்லூரி - கொட்டாஞ்சேனை, கொழு - 13 | பங்குனி 15, மற்றும் 22 திகதி | காலை. 9.00 - 12.00 மணிவரை |
| 08 | லொயலா கல்லூரி நீர்கொழும்பு | பங்குனி 18ஆம் திகதி<br>பங்குனி 21ஆம் திகதி | பி.ப 2-.00 - 4.30 மணிவரை அனைத்து கத்தோலிக்க மாணவர்களுக்கும்<br>பி.ப 2.00 - 4.30 மணிவரை கத்தோலிக்கரல்லாதவர்களுக்கு |
| 09 | தூய சம்மனசுகள் மகளீர் பாடசாலை பயாகலை | பங்குனி 19 | காலை 8.30 - பி.ப 1.30 மணிவரை |
| 10 | திருக்குடும்ப கன்னியர் மடம் - களுத்துறை | பங்குனி 20, மற்றும் 21ஆம் திகதிகள் | பி.ப 2.30 தொடக்கம் 4.00 மணி வரை |
| 11 | புனித பேதுரு கிளைக்கல்லூரி கம்பஹா | பங்குனி 24,25 மற்றும் 26ஆம் திகதி வரை | பி.ப 2.00 - 5.00 மணிவரை |
| 12 | புனித பேதுரு கல்லூரி- பம்பலப்பிட்டி கொழும்பு - 04 | பங்குனி 24 தொடக்கம் 26 வரை<br>பங்குனி 27ஆம் திகதி | பி.ப 2.00 - 5.00 மணிவரை பழைய மாணவர்களின் பிள்ளைகள்<br>பி.ப 2.00 - 5.00 மணிவரை ஏனையவர்களுக்கு |
| 13 | புனித சூசையப்பர் கிளைக்கல்லூரி வத்தளை | பங்குனி 24 தொடக்கம் 28ஆம் திகதிகள் | காலை 9.00 - பி.ப 1.30 மணிவரை |
| 14 | கிறிஸ்து அரசர் கிளைக் கல்லூரி - வெலிவேரிய | சித்திரை 26 மற்றும் 27ஆம் திகதிகள் | காலை 9.00 - 12.00 மணிவரை |
| 15 | லொயலா கிளைக் கல்லூரி போபிட்டிய | பங்குனி 26, 27, மற்றும் 28ம் திகதிகள் | பி.ப 2.00 - 4.00 மணிவரை |
| 16 | கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு - 13 | பங்குனி 29ஆம் திகதி<br>பங்குனி 31 மற்றும் சித்திரை 1ஆம் திகதிகள், | காலை 8.00 - 9.00 மணிவரை நல்லாயன் பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள், பாடசாலையில் படிக்கும் மாணவிகளின் சகோதரிகள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள்,<br>காலை 8.00 - 9.00 அனைத்து கத்தோலிக்கர்களுக்கும் |
| 17 | புனித சூசையப்பர் கல்லூரி மருதானை, கொழும்பு - 10 | பங்குனி 31 தொடக்கம் சித்திரை 4ஆம் திகதி வரை | காலை 9.00 - 2.00 மணிவரை |
| 18 | திருக்குடும்ப கன்னியர் மடம் கொழும்பு - 04 | சித்திரை 01 மற்றும் 2ஆம் திகதிகள் | காலை 8.00 - 12.00 மணிவரை |
| 19 | புனித யூட் கல்லூரி - நீர்கொழும்பு | சித்திரை 3 மற்றும் 4ஆம் திகதிகள் | காலை 8.00 - 12.00 மணிவரை |
| 20 | புனித லோரன்ஸ் கன்னியர் மடம் - கொழும்பு - 06 | சித்திரை 4ஆம் திகதி<br>சித்திரை 5ஆம் திகதி | காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை புனித லோறன்ஸ் கன்னியர் மடத்தில் பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள் தற்போது கற்கும் மாணவர்களின் சகோதரிகள்<br>காலை 9.00 - 10.00 மணிவரை அனைத்து கத்தோலிக்கர்களுக்கும் |
| 21 | டி மெசனட் கல்லூரி - கந்தானை | சித்திரை 5, 6ம் திகதிகள் | காலை 8.30 - 1.30 மணிவரை |
| 22 | ஆவே மரியா கன்னியர் மடம் - நீர்கொழும்பு | சித்திரை 9 மற்றும் 10ஆம் திகதிகள் | காலை 8.30 - பி.ப 3.30 மணிவரை |
| 23 | திருச்சிலுவை கல்லூரி - கம்பஹா | சித்திரை 10, 11 மற்றும் 12ஆம் திகதிகள் | காலை 8.30 - 12.00 மணிவரை |
| 24 | கிறிஸ்து அரசர் கல்லூரி பன்னிப்பிட்டிய | சித்திரை 23 மற்றும் 26 திகதிகள் | காலை 9.00 - 12.00 மணிவரை |
| 25 | வெற்றிமாதா கல்லூரி - மொறட்டுவ | சித்திரை 24, 25 மற்றும் 26ஆம் திகதிகள் | காலை 9.00 - 12.00 மணிவரை |
| 26 | நல்லாயன் கன்னியர் மடம் பானந்துரை | சித்திரை 28 மற்றும் 29ஆம் திகதிகள் | காலை 11.00 - 1.30 மணிவரை |
| 27 | புனித சூசையப்பர் கல்லூரி நுகேகொடை | வைகாசி 02 தொடக்கம் 30ஆம் திகதி வரை (கிழமை நாட்களில்) | காலை 10.00 - 1.30 மணிவரை |
| 28 | புனித செபஸ்தியார் கல்லூரி - மொறட்டுவ | வைகாசி 5 தொடக்கம் 09ஆம் திகதிகள் | காலை 8.30 - 12.00 மணிவரை |

விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்வதற்கு உங்களது குடும்ப புத்தகம், பிள்ளை திருமுழுக்கு பெற்றதற்கான திருமுழுக்கு சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேவையான ஆவணங்களை கொண்டுவருதல் வேண்டும். விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை அனுமதி வழங்குவதற்கு போதிய இடவசதியின்மையின் காரணமாக, அரசாங்க பாடசாலைகளிலும் பிள்ளைக்கான விண்ணப்பங்களை கோரவும், அத்தோடு பணம் பெறும் நோக்குடன் அனுமதியினை பெற்றுத்தருவதாக கூறும் நபர்கள் மட்டில் உங்கள் கவனத்தை செலுத்துவதோடு, அத்தகையவர்கள் பற்றிய விபரம் அறிந்தால் எமக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்

***அருட்பணி. ரஞ்சித் மதுராவல, கொழும்பு உயர் மறைமாவட்ட கல்வி இயக்குனர்,***
***கத்தோலிக்க தனியார் பாடசாலை, அதிகாரி***

# "திருவழிபாடு"
## என்ற தலைப்பில்
## குறுங்கால கற்கை நெறி – 2014

மாசித்திங்கள் 2ஆம் திகதி 2014 அன்று வெளியாகிய ஞான ஒளி பத்திரிகையிலே குறிப்பிட்டிருந்ததற்கேற்ப அருளாளர் யோசேவ்வாஸ் தமிழ் இறையியல் கல்வியகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள, திருவழிபாட்டைப் பற்றிய குறுங்கால கற்கை நெறி எதிர்வரும் 22.02.2014 மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

இக்கற்கை நெறியில் கலந்து கொள்ள விரும்புவோர் அனைவரும் 22.02.2014 அன்று மாலை 3.00 மணி முதல் 4.00 மணி வரை 500/= ரூபாவை, குறுங்கால கற்கை நெறி கட்டணமாக செலுத்தி பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

80% விரிவுரைகளுக்கு சமூகமளிக்கும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**தகவல்**
***அருட்பணி. றெஜினோல்ட் ஹசியன் (அ.ம.தி)***
***இயக்குனர்***
***தமிழ் இறையியல் பிரிவு***

## புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா – உடுகம, ஹினிதும



ஹினிதும பங்கு - உடுகம புனித செபஸ்தியார் ஆலயத்தின் 44வது வருடாந்த திருவிழா கடந்த 2014 ஜனவரி மாதம் 25-26ஆம் திகதிகளில் நடைபெற்றது. திருவிழா திருப்பலி அதிவண. பர்னாட் அடிகளாரின் தலைமையிலும் பங்குத்தந்தை அருட்திரு. இந்திக அன்தனி அடிகளார் மற்றும் அருட்திரு. கிரேஷன் மரியலங்காரம் அடிகளார் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

**தகவல்**
***அருட்தந்தை கிரேஷன் மரியலங்காரம்***

# துறவிகளுக்கான ஆண்டு 2014 - 2015

ஆடி 31 - 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி வரை கத்தோலிக்க திருச்சபையின் அனைத்துலக துறவிகள் ஆண்டு சிறப்பிக்கப்படும் என திருத்தந்தை அறிவித்துள்ளார்.

## கண்டி, கெட்டம்பே பங்கில் வளர்ந்தோர் திருமுழுக்கு – 2014



கண்டி மறைமாவட்ட கெட்டம்பே பங்கில் வளர்ந் தோருக்கான திருமுழுக்கு புனித மரியாள் ஆலயத்தில் கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு வியானி பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்-கப்பட்டது. இந்நிகழ்வில் அருட்சகோதரி சில்வியா மற்றும் அருட்தந்தை சுதத் ரொஹான் பர்னாந்து (பொது நிலையில் குடும்ப அப்போஸ்தலிக்க இயக்குனர்) அடிளாரும் கலந்து சிறப்பித்தனர் 18 பேர் இவ்வளர்ந்தோர் திருமுழுக்கு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர். இதனை படத்தில் காணலாம்.

நன்றி www.kandydiocese.net.

ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
16 மாசி மாதம், 2014 ஞாயிற்றுக்கிழமை.

## அனுதினமும் செபமாலை சொல்பவர்களுக்கு அன்னை மரியாளின் விசேட பாதுகாப்பும், வரங்களும் நிச்சயமாக கிடைக்கும். பெரிய துன்பங்கள் அவர்களை நெருங்காது. அவலமான மரணத்தை சந்திக்க நேரிடாது

ஓ! பாவி மனிதா! நீ அஞ்சாமல் உன் தேவைகளை மாதாவிடம் சொல். மாதாவின் உதவியினால் வேண்டு. உனக்கு உதவி செய்ய மாதா எப்போதும் ஆயத்த நிலையில் இருக்கிறார் என்பதை நினைவில் கொள். ஏனென்றால் எல்லா மனிதருக்கும் அவர்களுக்கு அவசியமான நேரத்தில் உதவி செய்யவேண்டும் என்பதுதான் இறைவனின் திருவுளம்! இவ்வாறு அன்னை மரியைப்பற்றி அழகாக கூறுகிறார் புனித பெசில். இதைவிட வேறெதுவும் எம்மை மகிழ்ச்சிப்படுத்திடுமோ? அன்னைமரியிடம் சொன்னால்தானே உதவி செய்ய. அன்னைமரி எமக்கு உதவி புரிந்திட இருகரம் நீட்டிக் காத்திருக்கின்றாள். நாம் யார் யார் இடமெல்லாமோ பலவேளைகளில் உதவிகேட்டு அலைந்து திரிந்திருக்கின்றோம். பல சமயங்களில் எங்கள் தேவைகள் நிறைவேறாமல் போய்விடுகின்றது. இறுதியில் கடவுள் என்னை கைவிட்டுவிட்டார் என்று புலம்புகின்றோம். ஏன் இந்த அவலநிலை? நாம் நம்பிக்கை வைக்கவேண்டிய இடத்தில் நம்பிக்கை வைக்கவில்லையே. ஏனென்றால் எமக்கு அவசியமான நேரத்தில் உதவவேண்டும் என்பதுதான் இறைவனின் திருவுளமும் கூட.

எனவே அன்னைமரியின் ஆண்டில் வாழ்ந்திடும் நாம் இவ்வாண்டில் அன்னையோடு சேர்ந்து பயணம் செய்வோம். மீட்புத் திட்டத்தில் அன்னைமரியாள் மிகவும் முக்கியமான பங்கை தேர்ந்தெடுத்திருக்கிறாள் என்பதை நாமறிவோம். இறைவனின் மீட்புத்திட்டத்தில் அன்னைமரியாள் தன்னை முற்றுமுழுவதுமாக இறைவனுக்கு கையளித்து இறைவார்த்தையின் சீடத்தியாக விளங்குகின்றாள். மாதாவின் பரிந்துரையை ஏற்றுக்கொண்ட ஆண்டவர் இயேசு கானாவூர்த் திருமணத்தில் தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றினார். தமது தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தினார். விண்ணகத்தையும் மண்ணகத்தையும் இணைக்கும் பாலம் அன்னைமரி. இறைவனை ஆராதிக்க சிறந்த வழியாக இருப்பவர் அன்னைமரி. குறிப்பாக செபமாலையில் நாம் மறையுண்மைகளான இயேசுகிறிஸ்துவின் பிறப்பு, திருப்பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு, விண்ணேற்பு போன்ற வாழ்க்கை நிகழ்வுகளை தியானிக்கின்றோம்.

அனுதினமும் செபமாலை சொல்பவர்களுக்கு அன்னை மரியாளின் விசேட பாதுகாப்பும், வரங்களும் நிச்சயமாக கிடைக்கும். பெரிய துன்பங்கள் அவர்களை நெருங்காது. அவலமான மரணத்தை சந்திக்க நேரிடாது. எமது வாழ்க்கையில் அன்றாடம் நாம் சந்திக்கும் துன்பதுயரங்கள், வேதனைகள், சோதனைகள் இவை அனைத்தும் சாத்தான் கொண்டு வருபவை. இவற்றையெல்லாம் முறியடிக்க ஒரேயொரு ஆயுதம்தான் செபமாலை. எல்லாத் தீமைகளின் விலங்கும் செபமாலை எனும் ஆயுதத்தால் உடைக்கப்படும், புதுவழி பிறக்கும். அன்னையின் மீது நாம் கொண்டிருக்கும் பக்தி நம்மை ஒருபோதும் கைவிடவோ, வழிதவறிச் செல்லவோ விடாது. நாம் அன்னை மரியோடு நெருக்கமாக இறைவனுடன்தான் நெருக்கமாகின்றோம் என்பதுதான் முற்றிலும் உண்மை. அன்னை மரியின் மூலம் இறைவனோடு நெருக்கமாக மனந்திரும்புவோம். காரணம் அன்னைமரி காட்சி கொடுத்த பல இடங்களில் மக்கள் மனந்திரும்புமாறு மன்றாடும்படிதான் கூறி இருக்கிறார். எனவே தவக்காலத்தை ஆரம்பிக்கவிருக்கும் நாம் முதலில் மனம்மாறுவோம். மனம்மாறி அன்னை மரியின் அன்புப் பிள்ளைகளாக அவள் கைகளில் தவழ்ந்திடுவோம்.

வானத்தில் உயரத்தில் வைத்து மரியாவை வாழ்த்தி வணங்குவதுடன் நின்றுவிடாது, வாழ்வுப் பயணத்தில் நம்பிக்கையின் உயர் மாதிரியாக நம்முடன் பயணிக்கும் அவரது கைப்பற்றி இயேசுவின் உண்மைச் சீடர்களாக வாழ்ந்து காட்டுவோம்.

*இறையாசீருடன்*
*ஆசிரியர்*

# புனித லூர்து அன்னை



**"உங்களில் கிறிஸ்து உருவாகும் வரை உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்" (கலா 4:19)**

மாசி 11ஆம் திகதி உலக நோயாளர் தினமாகும். அதே நாள் திருச்சபையானது லூர்து அன்னையின் விழாவை சிறப்பிக்கின்றது.

**அறிவியலும், மருத்துவமும், எவ்வளவுதான் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், நாம் அனைவரும் ஏதாவது ஒரு வகையில் நம் உடல் மனம் பாதிக்கப்பட்டு துன்பத்திற்கு உள்ளாகின்றோம்.**

**உடல் மன நோயிலிருந்து விடுபட லூர்து அன்னையை நாடாதவர்கள் யாருமில்லை. அவரின் பரிந்துரையை நாடி நாம் குணம் பெற வேண்டுமென்று திருச்சபை இன்று 11.02.2014 அன்னைக்கு விழா எடுக்கின்றது.**

பிரான்ஸ் நாட்டில் மூன்று மலைக்குன்றுகள் சூழப்பட்டிருக்கும் அழகிய நகர் லூர்து. அந்த நகரில் மசபியேல் குகையில் தான் நம் அன்னை 1858, மாசி 11ஆம் திகதி முதல் முறையாக பெர்னதெத்திற்கு காட்சி கொடுத்தார் என்பது நாம் அறிந்ததே. இவ்வாறாக அன்னை மரியாள் 1858ஆம் ஆண்டு, ஆடி மாதம் 16ஆம் திகதிக்குள் மொத்தம் 18 முறை பெர்னதெத்துக்கு காட்சி கொடுத்தார்கள். 16ஆம் காட்சியின்போது தான் தன் பெயரை பெர்னதெத்திற்கு கூறினார். "நாமே அமல உற்பவம்" அத்தோடு செபமாலை செபிப்பதன் அவசியத்தையும் கூறிக்கொண்டே இருந்தார். இதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்தான் 1854 மார்கழி எட்டாம் நாள் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் "மரியா அமல உற்பவி" என்ற கோட்பாட்டை அறிக்கையிட்டார்.

அன்று தொடங்கி லூர்து நகருக்கு பக்தர்கள் தினம் தோறும் செல்லத் தொடங்கினர். பெர்னதெத்து கண்ட காட்சிகளையும் அவர் பெற்ற அனுபவங்களையும் ஏற்றுக்கொண்ட திருச்சபை 1862 தை 18ஆம் நாள் அதிகாரப் பூர்வமாக லூர்து அன்னையின் காட்சிகளை ஏற்றுக்கொண்டது. 1907இல் இருந்து லூர்து அன்னை விழா உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது எண்ணற்ற புதுமைகள் இன்றும் நிகழும் அருள் தளமாக லூர்து நகர் விளங்குகின்றது.

லூர்து நகருக்குச் சென்று அன்னையிடம் மன்றாடியவர்கள் அன்னையின் அருளைப் பெறாமல் போனதில்லை. நோய்களில் இருந்து குணம் பெற்றவர்கள் பலர் இப்படியா அன்னையின் அருளால் குணம் பெற்ற ஒரு நிகழ்வைப் பார்ப்போம்.

கபிரியேல் கார்கிம் 1870இல் பிறந்தவர். கடவுளை மறந்து தபால் துறையில் வேலைசெய்து வந்தார். 1899இல் ஏற்பட்ட ஒரு தொடர்வண்டி விபத்தில் இடுப்புக்குக் கீழே செயலிழந்து படுத்தபடுக்கையானார். இவருடைய அத்தை கபிரியேலின் விருப்பத்திற்கு மாறாக ஸ்ட்ரெச்சரில் வைத்து லூர்து நகருக்கு அழைத்துச் சென்றார். தொடர்வண்டியில் போய்க்கொண்டிருந்த போதே கபிரியேல் இறப்பின் வாசலைத் தொட்டுத் திரும்பினார்.

**நற்கருணை கதிர் பாத்திரத்தை தூக்கி சிலுவை அடையாளம் வரைந்து ஆசீர் வழங்கிய குரு, கபிரியேல் பக்கம் திரும்பி ஆசீர் அளித்தார். அந்த வேளையில் என்ன அற்புதம் "நான் எழுந்து நிற்க வேண்டும்" என்று கத்தியவராக எழுந்து மாதாவை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.**

லூர்து நகர் சென்று ஒப்புரவு அருள்சாதனத்தின் வழியாக கபிரியேல் பாவ மன்னிப்பு பெற்றார். அன்னையின் அற்புத நீருற்று நீரை அவரின் உடலெல்லாம் தடவினார்கள். திடீரென அவர் இறந்தவர் போலானார். விடுதிக்குத் திரும்பலாம் என்றால் அதற்குள் நற்கருணைப் பவனி ஆரம்பமாகி விட்டது. முகத்தில் ஒரு துணியைப் போட்டு மூடிவிட்டு அனைவரும் நற்கருணை ஆண்டவரை வணங்கிக் கொண்டு இருந்தார்கள்.

நற்கருணை கதிர் பாத்திரத்தை தூக்கி சிலுவை அடையாளம் வரைந்து ஆசீர் வழங்கிய குரு, கபிரியேல் பக்கம் திரும்பி ஆசீர் அளித்தார். அந்த வேளையில் என்ன அற்புதம் "நான் எழுந்து நிற்க வேண்டும்" என்று கத்தியவராக எழுந்து மாதாவை நோக்கி நடக்க ஆரம்பித்தார். 1901 ஆவணி மாதம் 20ஆம் திகதியன்று புகழ்பெற்ற 60 மருத்துவர்கள் இவரை பரிசோதித்து புதுமையை உறுதிசெய்தார்கள். இவ்வாறாக அன்று முதல் இன்று வரை அன்னையை அண்டிச் செல்லும் அனைவரும் தங்களின் உடல் உள்ளம் ஆன்மாவைக் காயப்படுத்தும் எவ்வகை நோயாயினும், அற்புதமாக குணம் பெற்று சான்று பகர்கின்றனர். ஆகவே மரியன்னை ஆண்டை சிறப்பித்துக்கொண்டிருக்கும் நாம் செபமாலையை மனமொன்றிச் செபித்து லூர்து அன்னையின் பரிந்துரையால் உடல், உள நோயிலிருந்து விடுதலை பெறுவோமாக.

********

**ஆக்கம் : பெர்னத்**

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# இளைஞர்களின் வழிகாட்டி தோபியா

## தோபியாவின் பயணம் வெற்றி பெற்றதா?



இளையோர் பக்கம்

அங்கம் - 50

தந்தை தனக்குப் பணித்த கடமையை நிறைவேற்ற புறப்பட்டார் இளைஞர் தோபியா. துணைக்கு புதிய சகோதரராகப் பெற்ற வானதூதர் இரபேல் உடன் சென்றார். இவர்களைப் பின்தொடர்ந்து வீட்டில் வளர்க்கப்பட்டிருந்த செல்லப் பிராணியான நாயும் சென்றது (6:2), மூவரும் இணைந்த பயணம் வெற்றிப் பயணமாக அமைந்திருந்தது என்பதைக் காணலாம். இதனைத் தெளிவாக்கும் விதமாக பயண முடிவில் அவர்கள் வீடு திரும்புவதைப் பற்றி தோபி : 11:4, "இருவரும் ஒன்றாகச் சென்றனர். நாயும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றது" என்று குறிப்பிடுகின்றது. வெற்றி பெற இணைந்தே செல்ல வேண்டும், இணைந்தே செயல்பட வேண்டும் என்ற படிப்பினையை இதன் மூலம் கற்றுக்கொள்ள முடியும்.

அவர்கள் விடியற் காலையில் புறப்பட்டார்கள். நாள் முழுவதும் நடந்து, பொழுது சாயும் வேளையிலே திக்ரீசு ஆற்றங்கரையோரமாகத் தங்கினர். இந்த ஆறு அசீரியர் காலத்தில்தான் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இதைப் பற்றிய விவிலியக் குறிப்புகள் அதிகம் காணப்படவில்லை. இருப்பினும், தொ.நூ 2:14இல் "மூன்றாவது ஆற்றின் பெயர் திக்ரீசு. இது அசீரியாவிற்கு கிழக்கே ஓடுகிறது" என்று வாசிக்கிறோம். அதாவது இந்த திக்ரீசு ஆறு ஏதேன் தோட்டத்திலிருந்து புறப்பட்ட நான்கு ஆறுகளில் ஒன்று என்பதை தொடக்க நூல் ஆசிரியர் விவரிக்கிறார்.

### உற்சாகமான வார்த்தையும் – பெரிய மீனும்

வெயிலில் நடந்து மாலைப் பொழுதினில் ஆற்றங்கரையோரம் வந்தபொழுது சற்று ஆறுதலாக இருந்திருக்கும். அவர்களுக்குள் இளைஞர் தோபியா, தண்ணீரைக் கண்டவுடன் எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டிருக்க வேண்டும். எனவேதான், முதன் முதலில் பாதங்களைக் கழுவ ஆற்றில் வேகமாக இறங்கினார். அந்தோ பரிதாபம், அவரைப் பயமுறுத்தக்கூடிய அளவு பெரிய மீன் ஒன்று அவர் காலைக் கவ்வ முயன்றது. எனவே, தோபியா அலறினார் (6:2). தோபியாவின் அலறலைக் கேட்ட வானதூதர் இரபேல் அவருக்குத் தைரியம் மூட்டினார். "பிடியும், மீனை உறுதியாகப் பிடியும்" என்று அறிவுறுத்தினார். தோபியா தைரியமுடன் மீனைப் பற்றியிழுத்து அதைக் கரைக்கு கொண்டு வந்து சேர்த்தார் (6:3). தன்னோடு உடன் வந்தவர்களின் தைரியமூட்டும் வார்த்தை -களைக் கேட்ட தோபியா வீரமுடன் செயல்பட்டு பெரிய மீனைக் கரைக்கு கொண்டு வந்து சேர்த்தார். கோழைகளாக இருப்பவர்களை துணைக்கு இருப்பவர்கள், அல்லது உடனிருப்பவர்கள் தைரியமூட்டினால் யாரும் நினைத்துப் பார்க்க இயலாத அளவுக்கு வெற்றி பெறுவார்கள். எவ்வளவு பெரிய வீரனாக இருந்தாலும் உடனிரு -ப்பவர்கள் தைரியமூட்டாது அச்சுறுத்தினால் வீரனும் கோழையாவான். கோழையாகித் தோல்வி -யைச் சந்திப்பான்.

### அ. உற்சாக குளுகோஸ் தேவை

இன்றுள்ள இளைஞ-ர்கள் தாங்கள் பாராட்ட-ப்பட வேண்டும் என்றும், தங்களின் நல்ல செயல்களுக்கு அங்கீகரிப்பு கிடைக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார்கள்.தங்கள் இல்லங்களில், பள்ளிகளில் கல்லூரிகளில், வேலை செய்யும் இடங்களில் பணி செய்யும் பொது இடங்களில், தாங்கள் செய்யும் ஒவ்வொன்றுக்கும் பாராட்டுப் பெற வேண்டுமென்று எதிர் -பார்க்கிறார்கள். "நான்றாய் செய்திருக்கிறாய்" என்று பாராட்டிப் பாருங்கள் இவ்விளைஞர்கள் இன்னும் சிறப்பாக அருமையாகச் செய்வார்கள். "பாராட்டு" என்ற உற்சாக மருந்து இளைஞர்களுக்கான "குளுக்கோஸ்" இந்த உற்சாக, உளவியல் "குளுக்கோஸ்" வழியாக பல இளைஞர்களின் நம்பிக்கையைப் பெற முடியும். அவர்களை நல்வழிப்படுத்தி வெற்றிப் பாதையில் வழிநடத்தவும் முடியும்.

விவிலியத்தில் உற்சாக வார்த்தைகளில் வெற்றி பெற்றவர்களில் இருவரை இங்கு காண்போம். விடுதலைத் தலைவர்களின் வரலாற்று காலம் அது. இறைவன் ஏகூது (நீதி 3:12-30) வழியாக செய்த நன்மைகளை மறந்து இஸ்ரயேலர் பாவம் செய்தனர் (நீதி 4:1). எனவே கானானிய மன்னரின் கையில் இஸ்ரயேலர் ஒப்படைக்கப்பட்டனர். கானானிய நாட்டின் படைத்தலைவன் சீசரா இஸ்ரயேலரைப் பயமுறுத்திக் கொடுமைப்படுத்தி வந்தான் (நீதி 4:2-3). எனவே மக்கள் ஆண்டவரிடம் முறையிட்டனர்.

ஆண்டவரும் பெண் இறைவாக்கினரும், நீதி வழங்கி இஸ்ரயேலரை வழிநடத்தி வந்த இலப்பிதேத்தின் மனைவியுமான தெபோரா வழியாக விடுதலைச் செய்தியை அனுப்புகிறார். அச்செய்தி பாராக்கு என்பவருக்கு வருகின்றது. பாரக்குவோ, "நீர் என்னுடன் வந்தால் நான் செல்வேன். நீர் என்னுடன் வராவிடில் நான் செல்ல மாட்டேன்" (நீதி 4:8) என்கிறார். அதற்கு தெபோரா "நான் உம்முடன் உறுதியாக வருவேன். ஆயினும் நீர் செல்லும் வழி உமக்கு பெருமை தராது. ஏனெனில் ஆண்டவர் ஒரு பெண்ணிடம் சீசராவை ஒப்படைப்பார்" (நீதி 4:9) என்று கூறுகின்றார். பயமும், கோழைத்தனமும், தயக்கமும் கொண்டிருந்த பாராக்குக்குத் துணையாக தெபோரா சென்றார். ஆண்டவர் கூறியவாறே அனைத்தும் நிகழ்ந்தது. இஸ்ரயேலர் கானானியர் கையிலிருந்து விடுவிக்கப்பட்டனர் (நீதி 4:23-24). ஆண்டவர் தெபோரா வழியாக அனுப்பிய செய்தியை ஏற்கத் தயங்கிய பாராக்கு தெபோராவின் உடனிருப்பால் இஸ்ரயேல் மக்களுக்கு வெற்றியின் கருவியாக இருந்து செயல்பட்டார். "நான் உம்முடன் வருவேன்" என்ற தெபோராவின் உற்சாகமான வார்த்தையில் நம்பிக்கை கொண்டு செயல்பட்டார். எனவேதான் கனானியரை வெற்றி கொள்ள முடிந்தது.

இதைப்போன்ற செய்தியை மோசேயின் அழைப்பிலும் காணலாம். ஆண்டவர் மேசேயை அழைத்து எகிப்தில் துன்புறும் மக்களை விடுவித்து வரவேண்டும் என்று கட்டளையிட்டார். அதைத் தவிர்ப்பதற்கு பல சாக்குபோக்குகள் சொன்னார் மோசே. அதில் தனக்கு நாவன்மை கொண்ட அவர் சகோதரரான லேவியர் ஆரோனை துணைக்கு அனுப்புகிறார். அத்துடன் அருஞ்செயல்கள் பல ஆற்றிட கோல் ஒன்றையும் கொடுக்கிறார் (விப 4:10-17). தொடர்ந்து வரும் விடுதலைப் பயணத்தில் ஆரோன் மோசேக்குத் துணையாயிருந்து இஸ்ரயேல் மக்கள் விடுதலை பெற எப்படி உதவினார் என்பதை நாம் நன்கு அறிவோம். எல்லா செயல்பாடுகளிலும் ஆண்டவர் உடனிருந்து அவர்களுக்கு வெற்றி தந்தார். தயக்கம் காட்டும் போதும், கோழை மனப்பான்மையுடன் பின்-வாங்கிப் போகும்போது...

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# "மரியன்னைக்கு நாங்கள் செலுத்துவது வணக்கமா? ஆராதனையா? ஏன்



ஆக்கம் : அருட்பணி. ரூபன் பர்னாந்து

ஒரு குழந்தை பிறக்கும்போது அதைவிட மேலான வேறொன்றும் பிறக்கின்றது. அதுதான் தாய்மை. உலகில் உள்ள எல்லா செல்வங்களையும் தராசின் ஒரு தட்டில் வைத்து தாயை மட்டும் தனியாக தராசின் மறுத்தட்டிலே வைத்து நிறுத்துப்பார்த்தாலும் தாயின் தட்டுதான் தாழ்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஒரு சாதாரண மனிதனை ஈன்றெடுத்த தாயைப் போற்ற இந்த உலகிலே எந்த மொழியிலும் வார்த்தைகளே போதாது என்றால், "உருவிலான் உருவாகி உலகில் ஒரு மகனுதிப்ப, கருவிலான், கருத்தாங்கிய கன்னித்தாயை" நாம் எவ்வளவுக்கு அதிகமாக போற்றுதல் வேண்டுமென்றோ.

இறைமகனை தன் உதிரத்திலே சுமந்த அன்னை மரியாளை குறித்து பல்வேறு சர்ச்சைகளும் கேள்விக்கணைகளும் எழுப்பிக்கொண்டே இருக்கின்றன. அதாவது, "மரியன்னையை இவ்வா-றெல்லாம் புகழ்வது நியாயமா? ஆண்ட-வருக்கு உகந்ததா? விவிலியத்திற்கு ஏற்புடையதா?" என்று ஏனைய கிறிஸ்தவ பிரிந்த சபையினரும், பிறமதத்தவர்களும் அதுமாத்திரம் அல்லாமல் விசுவாசத்திலே தளர்ந்து போயிருக்கின்ற எங்களுடைய கத்தோலிக்கர்கள் சிலரும் கூட இவ்வாறான வினாக்களை தொடுக்கின்றனர்.

### இவ்வாறு மரியன்னையின் மாண்பையும் தூய்மையும் அவசங்கைப்படுத்துபவர்கள் அறிந்து கொள்ள வேண்டியவை:

மரியன்னை பக்தி முயற்சி யாரால், எப்போது தொடங்கப்பெற்றது என்று கேட்போமானால், மரியன்னை பக்தி முயற்சிகள் எந்த மனிதரும் ஆரம்பிக்கவில்லை மாறாக விண்ணத் -திலிருந்து மண்ணிற்கு இறைவனே அனுப்பிய வானதூதர் கபிரியேல், அதுவும் கிறிஸ்து பிறப்பிற்கு முன்பே ஆரம்பித்து வைத்தார். "கபிரியேல் தூதர், அருள் மிகப் பெற்றவரே வாழ்க" (லூக்-1:28) என்று வாழ்த்துரைத்து மரியன்னை பக்திக்கு வித்திட்டார். அவரையடுத்து எலிசபெத்து மரியன்னையின் பக்தியை மேலும் ஒருபடி உயர்த்தினார். "பெண்களுள் நீர் ஆசீர்பெற்றவர். என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் வாய்ப்புப் பெற்றதெப்படி..." (லூக் 1:42-45) என்றார். மேலும் "இதுமுதல் எல்லா தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக் 1:48) என்று மரியன்னையும் கூட தூய ஆவியால் ஏவப்பட்டு இறைவாக்கு உரைத்திருப்பது கண்கூடு.

மரியாள் வெறும் மகனைக் கருவில் சுமக்கவில்லை மாறாக இறைமகனைக் கருவில் சுமந்தாள். புனித அகுஸ்தினார் "ஒரு மனிதனின் உடலிலுள்ள உறுப்புக்களெல்லாம் நாக்குகளாக மாறினாலும் மரியன் -னையை அவருடைய தகைமைக்கு ஏற்றவாறு புகழ முடியாது" என்கிறார். இவ்வாறாக எல்லாப் பக்தி முயற்சிகளும் மரியன்னை பக்தி முயற்சியால் ஊட்டம் பெறல் வேண்டும். எவ்வளவுதான் நன்றாக குழம்பு வைத்தாலும் இறுதியாக அதை எண்ணெய் ஊற்றித் தாளிக்க வேண்டும். தாளிக்காத குழம்பிற்கு சுவை மனம் இல்லை. அவ்வாறே எல்லாக் கிறிஸ்தவ பக்தி முயற்சிகளும் மரியன்னை பக்தியால் தாளிக்கப்படல் வேண்டும். (Christian devotion must have a Marian Flavour)

> **மரியாள் வெறும் மகனைக் கருவில் சுமக்கவில்லை மாறாக இறைமகனைக் கருவில் சுமந்தாள்.**
> **– புனித அகுஸ்தினார் –**

### மரியன்னைக்கு நாங்கள் செலுத்துவது வணக்கமா? ஆராதனையா? ஏன்?

எம்முடைய கத்தோலிக்க திருச்சபையின் போதனையின்படி மரியன்னைக்கு நாங்கள் ஆராதனை செலுத்துவதில்லை. ஏனென்றால் "ஒரே சர்வேசுரனை மட்டும் ஆராதிப்பாயாக" என்று இறைவன்தாமே கூறி இருக் -கின்றார். ஆதலால் மூவொரு இறைவனுக்கு மாத்திரமே நாங்கள் ஆராதனை செலுத்துகின்றோம். மற்றப் புனிதர்களுக்கும் நாங்கள் வணக்கம் செலுத்துகின்றோம். ஏனென்றால் அவர்கள் இவ்வுலகிலே மனிதர்களாகப் பிறந்து, வாழ்ந்து, "உடல், சாத்தான், உலகம்" என்னும் முப்பெரும் சக்திளுடன் போராடி இறைவனுக்கு விருப்பமானதையே செய்ய வேண்டும் என்ற அவாவுடன் பல வேளைகளிலே வீழ்ந்தாலும் இறுதியிலே இறைவனையே அனைத்துமாக அணைத்துக் கொண்டு அவரது அன்புக்கு பாத்திரமான -வர்களாகிக் கொண்டவர்கள் அதாவது, "சீரியதொரு பந்தயத்திலே ஓடினேன் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தை பாதுகாத்தேன். நல் வாழ்வின் பரிசான வெற்றி வாகை எனக்காக காத்திருக்கின்றது" என்று வாழ்ந்தவர்கள் இவர்கள். இவர்கள் எங்களுக்கு முன்மாதிரி கையாகவும் எங்களுக்காக பரிந்து பேசுகின்ற -வர்களுமாக இருக்கின் றார்கள்.

இவ்வாறாக புனிதர்களுக்கு வணக்கம் செலுத்துகின்ற, நாங்கள் எம் அன்னையும் இறைவனின் தாயுமான மரியாளுக்கு "மேலான வணக்கம்" செலுத்துகின்றோம். வார்த்தைக்கு உயிர், உடல் கொடுத்தது மட்டுமன்றி இறைவனின் திட்டத்தில் தனியிடம் பெற்று மீட்பின் வரலாற்றிலே இயேசுவோடு இணைந்து செயலாற்றிய இறைவனுக்கு அன்பானவர். இதனால் மேலான வணக்கத்திற்கு மரியாள் உரியவராகின்றார். ஆராதனைக்கும், வணக்கத்திற்குமிடையே பாரிய வேறுபாடு இருக்கின்றது என்பதை நாங்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். மரியன்னைக்கு வணக்கம் செலுத்துவது முறையா? என்று கூட பலர் கேட்காலாம். இயேசுவின் கால்பட்ட இடங்களை புண்ணிய பூமி என்று மண்டியிட்டு வணங்கும் நாம் இயேசுவை தன் உதிரத்திலே தாங்கி, பெற்று, வளர்த்து மீட்பராக உலகிற்கு ஈந்த கன்னித்தாய்க்கு வணக்கம் செலுத்த வேண்டாமா? அன்னை மரியாளுக்கு மேலான வணக்கம் செலுத்துவது சாலப்பொருத்தமானதாக இருக்கின்றது.




# "உனக்கு நான் எனக்கு நீ"

ஒவ்வொரு மாசி மாதம் 14ஆம் நாள் புனித வாலன்டினை நாம் நினைவுகூறுகிறோம். இந்த வாலன்டீன் யார்? இவர் மூன்றாம் நூற்றாண்டில் உரோமையில் வாழ்ந்த கிறிஸ்தவ குரு. மாமன்னர் கிளாடியுஸ் உரோமையை ஆண்டபோது அவர் கிறிஸ்தவர்களை மிகவும் துன்புறுத்தினார். துன்புற்ற அவர்களுக்கு துணை நின்றவர் வாலன்டீன். மேலும் திருமணமான போர்வீரர்கள் தங்கள் குடும்பங்களோடு வாழ்ந்து, தொடர்ந்து போர்புரிய விரும்பாததால் இளைஞர்கள் திருமணம் செய்யக்கூடாது என்று ஓர் ஆணையைக் கிளாடியுஸ் கி.பி 270இல் பிறப்பித்தார். இந்த ஆணையை எதிர்த்தும், அன்பில் இணைய விரும்பிய இளம் உள்ளங்களை ஆதரித்தும், அவர்களுக்குத் திருமணங்களை நடத்தினார் வாலன்டீன். இதற்காக அவரைச் கைது செய்து கி.பி 270ஆம் ஆண்டு மாசி மாதம் 14ஆம் நாள் அவருடைய தலையை வெட்டிக் கொன்றார்கள்.

வயதிற்கு வந்த ஆண்களும், பெண்களும் சுதந்திரமாகத் திருமணம் செய்துகொள்ள அவர்களுக்கு உரிமை உண்டு என்ற மனித அடிப்படை உரிமையைக் காத்து மனித மாண்பை நிலைநாட்டியதற்காகத் தன் இன்னுயிர் ஈந்த அப்பெருமகனாரை நினைவுகூர்வது தான் இந்நாள். இதனால்தான் வலன்டீனுக்கும் அன்புக்கும், காதலுக்கும் திருமணத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. இன்று நாம் வாழ்கின்ற இந்த உலகிலே, நம் நாட்டிலே, நம் ஊர்களிலே, நம் குடும்பங்களிலே இந்த அன்பின் நிலை எவ்வாறு இருக்கின்றது?

## அன்புசெய்தல் ஒரு கலை

அன்பு, திருமணம், குடும்பம், உறவு, நட்பு போன்ற இவைதான் மனிதரின் வாழ்வில் அர்த்தத்தையும், நெருக்கத்தையும் தருவதோடு, மனிதரை முழு மனிதராக வாழச் செய்கிறது. அன்பு செய்வது என்பது ஒரு கலை. சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்பதுபோல, தண்ணீரில் நீந்தி நீச்சலைக் கற்பதுபோல, அன்பையும், அன்பு செய்துதான் கற்றுக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு நாளும் கற்கவேண்டும். எதைக் கற்றாலும் நாம் சில பிழைகளைச் செய்யலாம். கற்க கசடற என்ற திருவள்ளுவரின் குறள் அன்புக்கும் பொருந்தும். அன்பைத் தொடர்ந்து கற்போம். அன்பு செய்யக் கற்கும் கல்விக்கு முடிவேயில்லை.

## அன்பின் தன்மை

எப்போது, ஒருவரையொருவர் மதித்து, மாண்போடு ஏற்றுக்கொண்டு வாழ்கின்றோமோ, எப்போது ஒருவரையொருவர் தீர்ப்பிடாமல் ஏற்றுக்கொள்கிறோமோ, இணைந்து வளர்கின்றோமோ, பிறரை எப்போது போற்றி வாழ்த்துகின்றோமோ அப்போது நம் உறவில் அன்பு வெளிப்படும். உண்மையான அன்பு மற்றவரை நம்பி வாழச்செய்யும். மற்றவரின் வளர்ச்சிக்காகப் பொறுமையோடு காத்திருக்கும், மற்றவரை ஊக்குவிக்கும், மற்றவரின் துன்ப துயரங்களில் பங்கேற்கும், மற்றவரின் முகத்தில் முத்திரை குத்தி அவர் எப்பொழுதும் அப்படித்தான் என்று பொதுத்தீர்ப்பு வழங்காமல், மற்றவரும் மாறுவார்கள், சிறப்பாய் வளர்வார்கள் எனும் நம்பிக்கையோடு காத்திருக்கும், வாடியவரோடு வாடியும், அழுவாரோடு அழுதும், மகிழ்வாரோடு மகிழ்ந்துமிருக்கும். பிறரைத் தன்னைவிட உயர்வாகக் கருதும்.

## அன்பு எல்லோரும் விரும்புவது

மனிதரான நாம் எல்லோரும் அன்பு செய்யவும் அன்பு செய்யப்படவும் விரும்புகின்றோம். அன்புள்ள இல்லங்களில் வாழ்விருக்கும், வளர்ச்சியிருக்கும், மன்னிப்பு இருக்கும், மகிழ்ச்சியிருக்கும், ஊக்கமும், உயிரோட்டமும் இருக்கும். அன்பில்லையென்றால் நம் வாழ்வு ஒரு பாலைவனம்தான்

## அன்பு சவால்கள் நிறைந்தது.

உண்மையில் பிறரை அன்பு செய்யும்போது நாம் நமக்குள்ளதை மட்டுமல்ல, நம்மையே இழக்கவேண்டியிருக்கிறது. இது அன்பிற்கே உள்ள சிறப்பான வரைமுறை. இவ்வுலகை மீட்க வந்த இறைமகன் இயேசு கூட இந்த வரைமுறைக்கு உட்பட்டார். இதனால் அன்பு செய்ய துணிச்சலும் வேண்டும் என்பது தெளிவாகிறது. நம்மைப் பிறருக்காக இழக்கின்ற தியாகத்தில்தான் நம் அன்பின் ஆழம், அகலம், நீளம் உறுதி செய்யப்படுகின்றது.

## உனக்காக நான் எனக்காக நீ

இன்றைய சமூகத்தில் இன்னும் பெற்றோர்களே மாப்பிள்ளை பெண் பார்த்து திருமண வாழ்விற்கு ஏற்பாடு செய்வதைப் பார்க்கின்றோம். அதே நேரத்தில் இளைய தலைமுறையினர் தாங்கள் படிக்கின்ற கல்லூரிகளில், பணி செய்யும் இடங்களில், வாழும் கிராமங்களில், நகரங்களில் காதலித்து திருமணம் செய்து கொள்வதையும் நாம் அறிவோம். காதலித்து திருமண வாழ்வை வாழ்ந்தாலும், திருமணத்திற்குப் பின் கணவன் மனைவி ஒருவர் ஒருவரைக் காதலித்து திருமண வாழ்வை வாழ்ந்தாலும், திருமண வாழ்வின் தொடக்கம், தொடர்ச்சி, வளர்ச்சி அதன் உச்சம் எல்லாமே அன்பை மையமாக வைத்தே இயங்குகிறது.

இல்லறம் நல்லறமாக இருக்க கணவன் மனைவி ஒருவர் ஒருவரிடம் உள்ள நிறைவைக் கண்டு பெருமிதம் கொள்கிறார்கள். ஒருவர் ஒருவரிடமுள்ள நேர்மறையான (Positive) குண நலன்களைப் பாராட்டுகிறார்கள். தினமும் அவ்விருவரின் சொல் செயலெனும் அன்புப் பாடலில் ஒலிக்கும் உட்கருத்து "உனக்காக நான், எனக்காக நீ" என்பதுதான்

## சமூக அன்பு

சமூகம் என்பது பல குடும்பங்கள் சேர்ந்து வாழ்வதுதான். பேசும் மொழியால் தமிழர்கள், சிங்களவர்கள் ஒரு சமூகம் என்றாலும் நாம் சார்ந்து வாழும் சமயங்கள், கட்சிகள், சாதிகள், பொருளாதாரப் பின்னணிகள் வெவ்வேறாக இருக்கின்றன. இந்த வேறுபாடுகளைத் தாண்டி மனிதர்களாக நம்மை வாழ அழைப்பதுதான் சமூக அன்பு. உண்மையான சமூக அன்பிருக்கும்போது மனிதர், மனிதர் என்ற ஒரே காரணத்திற்காக, மதிக்கப்பட்டு, மாண்போடு போற்றப்பட்டு, மனித உரிமைகள் காக்கப்படும். சமூக அன்பில், பயத்திற்கும், பொறாமைக்கும், எதிர்ப்புக்கும் இடமில்லை. புரிதலுக்கும், ஏற்றுக் கொள்ளுதலுக்கும், ஒற்றுமைக்கும் இடமுண்டு. இலங்கையைப் பொறுத்தவரை இத்தகைய சமூக அன்பில் நாம் இன்னும் அதிகமாகவே வளர வேண்டியிருக்கிறது.

## நாடும் அன்பும்

நாடு என்றாலே பெரும்பாலும் ஓர் இனம், ஒரு மொழி பேசுகிறவர்களாகத்தான் இருப்பார்கள். உலகில் உள்ள சில நாடுகள் இதற்கு விதிவிலக்காக இருக்கின்றன. அதில் ஒன்று நம் தாய் நாடாம் இலங்கை. ஏனெனில் நம் இலங்கை நாட்டில் பல மொழி பேசுபவர்களும், பல இன மக்களும், பல சமயங்களைத் தழுவியவர்களும், பலவிதமான பொருளாதார நிலைகளில் உள்ளவர்களும் வாழ்கின்றார்கள். இத்தனை வேறுபாடுகளுடன் நாம் ஒற்றுமையாக வாழ நமக்கு நம் நாட்டின் மீது அன்பு இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு மொழியைப் பேசுகிறவர்கள், ஒரு சமயத்தைச் சார்ந்தவர்கள், ஓர் இனத்தைச் சார்ந்தவர்கள் மற்றவரை அன்பு செய்யாமல், ஆணவமாக ஆதிக்கம் செய்ய நினைத்தால், நம் நாடு நாடாக இருக்காது. அது காடாகிவிடும்.

எனவே இலங்கை நாட்டில் உள்ள எல்லா நல்ல உள்ளங்களும் நம் நாட்டை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அழிவுச் சக்திகளிடம் இருந்து காத்திட மிக எச்சரிக்கையோடும், விழிப்போடும் இருத்தல் வேண்டும். ஆகவே அன்பிருக்கும் இடத்தில் கடவுளும், கடவுள் இருக்கும் இடத்தில் அன்பும் இருப்பதால், அன்பே கடவுள் என்கிறோம். கடவுளை அறிந்தவர்கள் அன்பு செய்கிறார்கள். அன்பு செய்பவர்கள் கடவுளை அறிந்தவர்கள் என்கிறார் புனித யோவான் (1யோவா 4: 8) இறைவன் தன் படைப்பின் வழியாகத் தன்னை வெளிப்படுத்துகிறார் என்கிறார் பவுலடிகளார் (உரோ 1:20) இறைவா உன் படைப்பிலே என்மீது நீ கொண்டுள்ள அன்பை நான் புரிந்துகொள்கிறேன் என்கிறார் தாகூர் (கீதாஞ்சலி 59) நாம் இறைவனை அன்பு செய்வதற்கு முன்பே அவர் நம்மை அன்பு செய்தார் (யோவா 4: 19)

இறைவனின் அன்பை அவரது படைப்பிலும், சிறப்பாக நம்மைப்போன்ற சக மனிதர்களிலும் நாம் கண்டு உணர்ந்திருக்கின்றோம். இரசித்து அனுபவித்திருக்கின்றோம். அன்பே கடவுள் என்றால் இந்த அன்பின் நாளை, வாலன்டீன் நாளை, இறைவனின் நாள் என்றால் அது மிகையாகாது. அன்பில் மீண்டும் பிறப்போம் அன்பில் வளர்வோம், அன்பில் மூழ்குவோம், அன்பில் திளைப்போம், அன்பில் உயிர் பெறுவோம், அன்பில் உயிர் கொடுப்போம்.

"உண்மையில் பிறரை அன்பு செய்யும்போது நாம் நமக்குள்ளதை மட்டுமல்ல, நம்மையே இழக்கவேண்டியிருக்கிறது. இது அன்பிற்கே உள்ள சிறப்பான வரைமுறையாகும்".



குடும்பம் அங்கம் 70
குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.

## வாழ்வின் சுக்கான்



கணவன் மனைவி இருவருக்குமிடையில் நல்ல அன்புத் தொடர்பை வளர்க்க வேண்டுமானால் தனது வாழ்வின் சுக்கானை ஒருவர் மற்றவரிடம் கொடுப்பது பிழையாகும். மற்றவர் அதாவது கணவன் அல்லது மனைவி ஏதாவது கூறினால் அதை நினைத்து நான் மனம் நொந்து கொண்டால் அதன் அர்த்தம் என்ன? எனது சுக்கானைக் கூறியவரிடம் கொடுத்துவிட்டேன் என்பதாகும். மனம் நோகும்படி மற்றவர் ஏதாவது கூறினால், அவர் கூறியதில் நான் ஏதாவது திருத்த உண்டா? எனப் பார்த்து நல்லதை எடுத்துவிட்டு, வேதனை ஏற்படுத்துவதை விட்டு விடுவதே நலமாகும். அதனால் நான் புண்படமாட்டேன். இல்லையேல் மற்றவர் என்னை வழிநடத்தத் தொடங்கினால் அவரது கையில் எனது சுக்கானைக் கொடுத்துவிட்டேன் என்றால் நான் துக்கப்படுவேன், கோபப்படுவேன், மனப்புண் ஏற்படத் தொடங்கி விடும். அந்த இடைவெளியில் சாத்தானின் சிந்தனைகள் வந்து நிரப்பிவிடும். மற்றவர் கூறியதை மனதில் வைத்து எந்த நேரமும் கவலைப்பட்டு ஆத்திரப்பட்டுக் கொண்டே இருப்பேன்.

அதனாலே எனது சுக்கானை எப்பொழுதும் எனது கையில் வைத்திருக்கச் சிறுவயதிலிருந்து பெற்றோர் பழக்க வேண்டும். அவர் அப்படிச் சொன்னால் நான் ஏன் கோபப்பட்டேன். நான் ஏன் பழிவாங்கத் துடித்தேன். எனக்குள்ளே என்ன நடக்கிறது? என்பதைத் தியானிக்க வேண்டும்.

எமது சுக்கானை இறைவனிடம் கொடுத்தால் சுக்குநூறாக நொருங்கிய இதயத்தை முழுமையாக்கித் தருவார். அதனால் எனது சுக்கானை இறைவன் கையில் கொடுத்துள்ளேனா? என்பதை அடிக்கடி சோதித்துப் பார்க்க வேண்டும்.

இன்று பொதுவாக சமுதாயத்திடமே எமது சுக்கானைக் கொடுக்கின்றோம். இதுதான் ஸ்ரைல் என்று சமுதாயம் கூறுகிறது. இப்படி உடுத்தால், வாழ்ந்தால், நடந்தால்தான் என்னை ஏற்றுக்கொள்ளும் என்று சமுதாயத்தைச் சந்தோஷப்படுத்தவே கஷ்டப்படுகிறோம். அதனால் நாகரிகம் என்ற போர்வையில் எமது உடைகளைத் தெரிவு செய்கிறோம். உடலை மூடவே உடை தேவை. ஆனால் இன்று உடையைக் காட்டவே உடலை மூடுகின்றோம். அதனால் மூடவேண்டிய பகுதிகளைத் திறந்து விடுகின்றோம். திறந்து விடவேண்டியவற்றை மூடி விடுகின்றோம். அப்பொழுதுதான் என்னை எல்லோரும் பார்ப்பார்கள். நான் எப்படிப்பட்ட உடையை உடுப்பது என்பதை நானல்லவா தீர்மானம் எடுக்க வேண்டும். இங்கே எனது சுக்கானைச் சமுதாயத்திடம் கொடுத்துவிட்டேன் என்பது புரிகிறதா? இதை மனதில் கொண்டு

**சிந்திப்போம்**
**செயற்படுவோம்**

தொடரும்...

## சொற்களஞ்சியம்!

"நமது மகிழ்ச்சியில் இறைவன் பேசுகின்றார். நமது போராட்டத்தில் பிறர் கேட்குமளவுக்குப் பேசுகின்றார். நமது வேதனைகளில் இறைவனும் அழுகின்றார்"

"கொஞ்சம் பகுத்தறிவு, கொஞ்சம் அனுசரித்துப் போதல், கொஞ்சம் சிரிக்கத் தெரிந்திருத்தல் ஆகியவை இருந்தால் இந்த உலகில் நீ மகிழ்ச்சியுடன் இருக்க முடியும்"

"உன் வாழ்வில் யாரோடெல்லாம் சிரித்து மகிழ்ந்திருப்பாய் என்பது உனக்கு மறந்து போகலாம். ஆனால் யாரோடெல்லாம் சேர்ந்து அழுதாய் என்பதை மறக்க முடியாது"

"மகிழ்ச்சி எப்போதும் நம் மனதிற்குள்தான் இருக்கிறது. துன்பம் என்கிற சோதனை வரும்போது, சோர்வு எனும் திரைச்சீலையால் நாம் அதை மூடி விடுகிறோம்"

## விசுவாசத்தைக் காக்க விழிப்பாயிருங்கள்

அருட்பணி. பிலிப் I.V. Dei

### கத்தோலிக்கர் தங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்த...

ஒவ்வொரு கத்தோலிக்கரும் தன் விசுவாசத்திற்கு தானே பொறுப்பு என்பதை ஏற்றுக் கொள்வது அவசியம். தனக்குரிய தன் விசுவாசப் பொறுப்பை அவர் பங்குத் தந்தையிடமோ அல்லது வேறு எவரிடமோ ஒப்படைக்க முடியாது. தன் விசுவாசத்திற்கு பொறுப்பேற்காது அதை அலட்சியப்படுத்துவது விசுவாசத்திற்கு எதிரான குற்றமாகும்.

வாழ்க்கையில் வரும் ஒரு சில தேவைகள் நிறைவேற்றப்படாத காரணத்தால் விசுவாசத்தை உதறித் தள்ளி சபைக்குப் போவோம் என்று பேசுவது அவர்களின் சிறுபிள்ளைத் தனத்தை வெளிப்படுத்துகின்றது. விசுவாசத்திற்காக உயிர்கொடுத்த விசுவாச வீரர்களைப் பின்பற்றி நாம் ஒவ்வொருவரும் நம் விசுவாசத்திற்காக வாழுவோம் என உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கத்தோலிக்கரும் தன் விசுவாசத்திற்குப் பொறுப்பேற்று அதை ஆழப்படுத்த ஐந்து விசுவாச பழக்கங்களை முன்வைக்கின்றோம்.

1) ஒவ்வொருவரும் தினமும் அதிகாலையில் கண் விழித்ததும் பொருள் உணர்ந்து விசுவாச அறிக்கையைச் சொல்வது.
2) தினமும் அன்றைய தினத்திற்குரிய இறைவார்த்தையை வாசித்துத் தியானிப்பது
3) ஞாயிறு தினத்தில் பொருள்பொதியத் திருப்பலியில் பங்கேற்று தேவநற்கருணை ஆண்டவரைப் பெற்றுக் கொள்வது.
4) தினமும் தேவநற்கருணை ஆண்டவரோடு சில நிமிடங்கள் உரையாடுவது. வசதியிருந்தால் திருமணித்தியாலம் செய்வது.
5) ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தைத் தெரிந்தெடுத்துத் திருச்செபமாலையைச் செபிப்பது.

முற்றும்....

## குழந்தைகள் முன்னிலையில் செய்யக்கூடாத சில!



⁂ கணவன் - மனைவி சண்டை சச்சரவு குழந்தைகளுக்குத் தெரியக்கூடாது. அவர்கள் முன்னிலையில் சண்டையிட்டுக் கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

⁂ குழந்தைகள் முன்னிலையில் பிறரை பற்றி தேவையில்லாமல் விமர்சிக்காதீர்கள். உதாரணமாக "உங்கள் நண்பன் மகா கஞ்சனாக இருக்கிறாரே" என்று நீங்கள் உங்கள் கணவரிடம் கேட்டதை நினைவில் வைத்துக் கொண்ட குழந்தை, அவர் வரும்போது "அம்மா கஞ்சன் மாமா வந்திருக்கிறார்" என்று சொல்ல நேரிடலாம்.

⁂ தீய சொற்களை பேசுவதை தவிருங்கள். அதிலும் குழந்தைகள் முன்னிலையில் பேசுவதை அறவே தவிருங்கள். நீங்கள் பேசுவதை கவனித்து தான் உங்கள் குழந்தை பேசுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

⁂ சிறு குழந்தைகளை மிரட்டும்போது "கொன்னுடுவேன், தலையை திருகிடுவேன், கையை உடைப்பேன்" போன்ற வார்த்தைகளை உபயோகிக்காதீர்கள்.

⁂ சில தாய்மார்கள் சில விஷயங்களை தங்கள் கணவரிடம் இருந்து மறைக்க விரும்புவர். எனவே குழந்தைகளிடம் "அப்பாகிட்டே சொல்லிடாதே" என்று கூறுவர். அப்படி நீங்கள் சொன்னால், உங்கள் குழந்தை தன்னை பெரிய ஆளாக நினைத்துக் கொண்டு உங்கள் கணவர் முன்னிலையிலேயே "அப்பாகிட்டே சொல்லிடுவேன்" என்று மிரட்டும்.

⁂ குழந்தைகளிடம் அவர்கள் ஆசிரியரைப் பற்றி விமர்சிக்க வேண்டாம். "உங்க ஆசிரியருக்கு வேற வேலை இல்லை. உங்க ஆசிரியருக்கே ஒன்னும் தெரியாது" போன்ற வார்த்தைகளை அவர்களிடம் கூறக் கூடாது. அப்படி கூறினால் குழந்தைகளுக்கு அவர்கள் ஆசிரியர் மீது இருக்கும் மதிப்பு குறைந்து, அவர்கள் படிப்பை பாதிக்க வழிவகுக்கும்.

⁂ குழந்தைகளுக்கு எதற்கெடுத்தாலும் காசு கொடுத்துப் பழக்கக் கூடாது. அதுவும் கமிஷன் கொடுத்து பழக்கப்படுத்துவது கூடவே கூடாது. "கடைக்குப் போய் ஷாம்பூ வாங்கிட்டு வந்தால், உனக்கு சாக்லேட் வாங்க காசு தருவேன்" என்பது போல் பேசுவதை தவிருங்கள். இல்லாவிட்டால் நாளடைவில் ஒவ்வொன்றிக்கும் காசை எதிர்பார்க்க ஆரம்பித்துவிடுவர்.

⁂ குழந்தைகள் முன்னிலையில் தரமான படங்களையே பார்க்க வேண்டும். நீங்கள் வாங்கும் புத்தகங்களும் தரமாக இருக்கிறதா என்று பார்த்து வாங்கவும்

⁂ உங்கள் குழந்தையுடன் அடுத்த வீட்டுக் குழந்தையை ஒப்பிட்டுப் பேசாதீர்கள். அப்படி பேசினால் குழந்தையின் மனதில் தாழ்வு மனப்பான்மை வளரும்

⁂ படிப்பு விஷயத்தில் குழந்தைகளைக் கண்டிக்கும் போது, "பாசிடிவ் அப்ரோச்" இருக்கவேண்டும். "நீ நன்றாக படித்தால் டாக்டராவாய், நன்றாக விளையாடு பெரிய விளையாட்டு வீரர் ஆகலாம்" என்று கூறி ஊக்கப்படுத்த வேண்டும். "நீ படிக்கிற படிப்புக்கு பியூன் வேலை கூட கிடைக்காது. இந்த மார்க் வாங்கினா மாடு தான் மேய்க்கலாம்" என்றெல்லாம் பேசி, பிஞ்சு மனதை வேதனை அடைய செய்யக்கூடாது

⁂ குழந்தை முன்னிலையில் உங்கள் கணவர் வீட்டில் இருக்கும் பிற நபர்கள் சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது, புகையிலை போன்ற செயல்களை மேற்கொள்ள ஒரு போதும் அனுமதிக்காதீர்கள்.




## பொதுக்காலத்தின் ஆறாம் ஞாயிறு 16.02.2014

**வாசக விளக்கம்:** ஞானத்தின் பெட்டகமாக விளங்கும் இன்றைய முதல் வாசகம் சீராக் நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்நூலானது மோசே கொடுத்த கட்டளைகளை மக்கள் மறந்து விடக்கூடாது என்பதற்காக எழுதப்பட்டது. கொரிந்திய மக்கள் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவ விசுவாசம் கடவுளின் கொடை எனக் கூறும் பவுல் அடியார் இந்த விசுவாசம் உலக தத்துவங்களாலும் ஞானத்தினாலும் கொடுக்கப்பட்டதல்ல மாறாக கடவுளின் அளவற்ற இரக்கத்தினால் கொடுக்கப்பட்டது என விளக்குவதை இரண்டாம் வாசகத்தில் கேட்கின்றோம். இயேசுவின் மலைப் பொழிவின் தொடர்ச்சியாக வரும் இன்றைய நற்செய்தியானது. மோசே வழியாக கடவுள் கொடுத்த பத்துக்கட்டளைகளை எடுத்து இயேசு அதில் தன் புதுமையான சிந்தனைகளை புகுத்துகிறார். “ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்” என்று மிகவும் அதிகாரத்தோடு கற்பித்தார். இதன் மூலம் இயேசு திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்க முயலவில்லை. நிறைவேற்றவே பாடுபட்டார் என விளக்குகின்றது. நாமும் உலக தீமைகளை களைந்து விட்டு இறை நம்பிக்கையில் வாழ வரம் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** சீராக்கின் ஞானம் 15:15-20
இறைப்பற்றின்றி இருக்க ஆண்டவர் யாருக்கும் கற்பிக்கவில்லை.

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்

**இரண்டாம் வாசகம் :** 1 கொரி 2:6-10
உலகம் தோன்றும் முன்பே ஞானம் கடவுளின் திட்டத்தில் இருந்தது.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா தந்தையே விண்ணுக்கு மண்ணுக்கும் ஆண்டவரே உம்மைப் போற்றுகின்றேன் ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** மத் 5:17-37

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

அன்பின் சமுதாயம் மலர்ந்திட அனுதினமும் பாடுபடும் திருச்சபையையும், அதன் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து அனைவரும் அன்பின் சாட்சிகளாக என்றும் வாழ்ந்திடத் தேவையான அருட்கொடைகளை அவர்கள் மீது பொழிந்தருள வேண்டுமென்று...

நாட்டின் தலைவர்களும் மக்களும் ஞானத்தின் நெறிமுறைகளையும் சட்டத்தின் உட்பொருளையும் அவற்றால் விளையும் இரக்கம், அன்பு, மன்னிப்பு போன்றவற்றையும் கடைப்பிடித்து வாழவும் எரிச்சல், சினம், வெறுப்பு, பகை, பழிவாங்குதல் போன்றவற்றைக் களைந்து மக்கள் மனங்களை வென்று அன்பின் பாதையில் அனைவரும் வழிநடக்க வேண்டிய வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

சட்டங்களையும், சடங்குகளையும் விட உள்ளத்தூ-ய்மையே இறைவன் விரும்புகின்றார் என்பதை உணர்ந்தவர்களாக உள்ளத்தின் தீமைகளை களைந்து விட்டு தூய்மையிலும், நேர்மையிலும் நிலைத்து இறை நம்பிக்கையில் வாழ்ந்து அன்பின் சமூகமாகப் மாறிடத் தேவையான அருட்கொடைகளை எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் ஏழாவது ஞாயிறு 23.02.2014

**வாசக விளக்கம்:** மோயீசன் காலத்தில் கண்ணுக்கு கண் பல்லுக்குப்பல் என்ற சட்டத்திலிருந்து விடுபட அயலானை அன்பு செய்தல் பகைவனை மன்னித்தல் என்ற கருத்துக்களை கொண்ட சட்டத்தினை இறைவன் மோயீசன் வழியாக மக்களுக்கு வழங்குவதை இன்றைய முதல் வாசகம் விளக்குகின்றது. நாம் ஒவ்வொருவரும் கடவுள் வாழும் இல்லம் எமது உள்ளம் அவர் குடிகொள்ளும் கோவில் எனக்கூறும் பவுல் அடியார் பிளவு மனப்பான்மை கொண்டிருந்த கொரிந்து நகர் மக்களுக்கு நீங்கள் எல்லோரும் கிறிஸ்துவுக்கு உரியவர்கள் தூய ஆவியைக் கொண்டிருக்கிற ஆலயம் என்று இரண்டாம் வாசகத்தால் விளக்குகின்றார். நற்செய்தியில் கிறிஸ்தவ வாழ்வு பழிவாங்குதலையல்ல, மாறாக அன்பு செய்தலையும் தீமைக்குப் பதில் என்று நன்மை செய்வதையும் பற்றிக் கூறுகின்றது. கிறிஸ்து பழிவாங்குதல் என்ற பழைய ஏற்பாட்டு சட்டத்தினை அகற்றி பகைமை பாராட்டாத, பழிவாங்காத ஒரு புதிய சட்டத்தினை கொடுக்கின்றார். கடவுளின் இல்லமாம் எம் உள்ளத்தை கள்வர் குகையாக்காது பிறரன்பு சேவை செய்வதன் மூலமும் எம் அயலானை நேசிப்பதன் மூலமுமே எமது வாழ்வையும் அழகுபடுத்த முடியும் என்பதை உணர்ந்தவர்களாக வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** லேவி 19:1-2, 17-18
உன்மீது நீ அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக.

**பதிலுரைப்பாடல் :**
ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.

**இரண்டாம் வாசகம் :** 1 கொரி 3:16-23
நீங்கள் கிறிஸ்துவுக்கு உரியவர்கள் கிறிஸ்து கடவுளுக்கு உரியவர்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா கிறிஸ்துவின் வார்த்தையைக் கடைப்பிடிப்போரிடம் கடவுளின் அன்பு உண்மையாகவே நிறைவடைகிறது அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** மத் 5:38-48

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

அன்பின் வல்லமையை உலகிற்கு உணர்த்தும் எமது தாய் திருச்சபைக்கும், அதன் தலைவரான திருத்தந்தைக்கும் அவருடன் இணைந்து பணியாற்றும் ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவருக்கும் உமது திருவருளைப் பொழிந்து அன்பின் பாதையில் அனைவரையும் வழிநடத்தியருள வேண்டுமென்று...

கிறிஸ்துவையும், கிறிஸ்தவ சமயத்தையும் பின்பற்றும் நாங்கள் அனைவரும், சாதி, இனம், மொழி, மதம் போன்ற பாகுபாடுகளை களைந்து அனைவரையும் சமமாக அன்பு செய்து ஒருவருக்கொருவர் தீமை செய்யாது நன்மை செய்து வாழ வேண்டிய நல் மனதை தந்தருள வேண்டுமென்று...

நம்பிக்கை தான் எமது வாழ்வின் அடித்தளம் என்பதை நாம் நம்பவும், நம்பிக்கையின்மையே வாழ்வின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் மூலகாரணம் என்பதை நாம் உணரவும், பிரதிபலன் நோக்காது அனைவரையும் அன்பு செய்யவும், நமக்குத் தீமை செய்வோரை நாம் மன்னிக்கவும், நம்பிக்கையுடன் இறைவனிடம் செல்லவும் வேண்டிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று...

# தேவத்தை பசிலிக்காவும் அதன் பின்னணியும்

**அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை [முன்னாள் பேராயர்]**

தமிழில் அருட்தந்தை அ. உதயதாஸ்



தேவாலயத்தை கட்டி முடித்து 1974ஆம் ஆண்டு மாசி மாதம் 06ஆம் திகதியன்றே அபிஷேகம் செய்து அர்ப்பணித்துள்ளனர் என்பதை வெகுசிலரே அறிவர். மேலும் அதன் வரலாறும் ஒரு சிலருக்கே தெரியும் என்றாலும் பொய்யாகாது. இன்று தேவத்தை என்று அழைக்கப்படும் ஊரானது “நாரங்கந்த” (Orange hill) என்றே அழைக்கப்பட்டது. இங்கிருந்த பெரிய தோடம் மரம் காரணமாக இவ்வூரே தோடம் மேடு என்றழைக்கப்பட்டதாக முன்னோர் கூறுவர். பின்னர் மிகேல் முடியான்சே என்பவருக்கு சொந்தமாயிற்று இந்த 82 ஏக்கர் நிலத்தை தேயிலை பயிரிடுவதற்காக பிறவுன் கம்பனிக்கு கொடுத்ததாக கூறப்படுகிறது. அக்காலத்தில் தான் இதை “ஒரேஞ் ஹில்” என்று அழைத்தனர். இங்கே தேயிலைப் பயிர் சரிவராத காரணத்தால் பின்பு இறப்பர் பயிரிடப்பட்டது. இறப்பர் தொழிற்சாலையொன்றும் நிறுவப்பட்டது. இன்று மாசில்லாமல் உற்பவித்த மரியாள் கன்னியர் மடம் இவ்விடத்திலே காணப்படுகிறது.



பின்னர் இவ்விடத்தை கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்காக பணம் கொடுத்து வாங்கப்பட்டது. அத்தோடு சேர்ந்த இன்னும் இரு இடங்களையும் வாங்கியுள்ளனர். அதாவது இன்று பசிலிக்கா காணப்படும் மேட்டிடம் பல சிரமப்பட்டு 1946ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ஆம் திகதியும் இன்று லூர்து கெபி காணப்படும் கல்குகை சார்ந்த இடம் 1950ஆம் ஆண்டு ஆனி மாதம் 12ஆம் திகதியும் வாங்கப்பட்டுள்ளன. இவ்விடங்கள் இல்லையெனில் பசிலிக்காவின் அழகான தோற்றம் இன்று எமக்கு இருந்திருக்காமல் போயிருக்கும்.

முன்னரே வாங்கியிருந்த இடமான “ஒரேஞ் ஹில்” பிரதேசத்தில் இறாகமை பெருந்தெருவுக்கு அண்மையிலேயே முதல் தேவாலயம் கட்டப்பட்டது. அத்தோடே இறப்பர் தோட்டத்தினுள் லூர்து கெபியோன்றும் கட்டப்பட்டது. இது தேவத்தை லூர்து மாதா கோயில் என பிரபல்யம் அடைந்தது.

கி.பி 1939களில் 2ஆம் உலக மகா யுத்தம் ஆரம்பித்த வேளையில் ஹிட்லருடைய அதிகாரம் காட்டுத்தீ போல பரவ ஆரம்பித்தது. கருங்கடல் மற்றும் மோட்டா எகிப்து போன்ற நாடுகளில் அதிக பதட்டம் காணப்பட்டது.

மேலும் அந்நாட்களில் பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டிருந்த எமது இலங்கையில் ஹிட்லரின் தாக்குதல் இடம் பெறலாம் என்ற பயம் மேலோங்கியது. அந்நேரத்தில் தான் அப்போதிருந்த கொழும்பு பேராயர் அதிமேதகு மேரி மசோன் அ.ம.தி ஆண்டகை நாசிகளின் தாக்குதலிலிருந்து இலங்கையை காத்தருளுமாறு தேவதாயாரிடமே பிரார்த்தனை செய்தார். அவ்வாறு பாதுகாக்கப்படும் போது தேவ அன்னையின் மகிமையை பறைசாற்றும் முகமாக தேவ அன்னையின் பெயரில் தேசிய பசிலிக்கா தேவாலயம் அமைப்பதென்று நேர்ந்து கொண்டார். 1940 வைகாசி மாதம் 26ஆம் திகதியே இந்நேர்த்தி இடம் பெற்றுள்ளது. இது தனிப்பட்ட நேர்த்தியாகவே இருந்தது.

பின்னர் யப்பானும் படிப்படியாக யுத்தத்தில் பங்கு கொண்டது. கீழைத்தேய நாடுகள் ஒவ்வொன்றாக யப்பானுடைய அதிகாரத்திற்குள் சிக்கியது. பேர்மா, சிங்கப்பூர், மலேசியா எனப் பட்டியல் நீண்டு கொண்டே போனது அடுத்த இலக்காக இலங்கையும் இந்தியாவுமே இருந்தது.

மக்களின் மனச்சஞ்சலத்தையும் பீதியையும் உணர்ந்த பேராயர் மசோன் அந்த நேர்த்தியை வெளிடைப்படையாக பொது நேர்த்தியாக 1942ஆம் ஆண்டு மாசி மாதம் 15ஆம் திகதி தேவத்தையில் வைத்துப் புதுப்பித்தார். அதை மக்களுக்கு வெளிப்படுத்தும் முகமாக 1942ஆம் ஆண்டு மாசி மாதம் 2ஆம் திகதி ஒரு சுற்றுமடலையும், சிறுவர்களை இதற்காக விசேட செபமொன்றையும் சொல்லுமாறு பனித்து, பங்குனி மாதம் 16ஆம் திகதி இன்னுமொரு சுற்றுமடலையும் எழுதினார். (இன்று நாமும் இலங்கையில் நீதியுடன் கூடிய நிலையான சமாதானத்தை வேண்டிய இப்படியானதொரு செபப்போரை செய்யலாமே) ஏனெனில் இலங்கையை கொடிய யுத்தத்திலிருந்து பாதுகாத்த சிறுவர்களின் செபம் வல்லமைமிக்கது என்று பேராயர் நம்பியிருந்தார்.

பின்னர் சித்திரை மாதம் 1942ஆம் ஆண்டு 5ஆம் திகதி யப்பானின் 72 விமானங்களும் யுத்தக் கப்பல்கள் சிலவும் இங்கு வந்து கொழும்பு துறை முகத்திற்கும் அதை அண்டிய சில இடங்களுக்கும் குண்டு போட்டாலும் அந்தப் போர் அவர்களுக்கு வெற்றியளிக்கவில்லை. சில தினங்களுக்குப் பின் திருகோணமலை துறைமுகத்திற்கும் குண்டு போட்டபோதும் அதுவும் தோல்வியிலேயே போய் முடிந்தது. இலங்கையை மேலும் அவர்கள் ஏன் தாக்கவில்லை என்பது இன்றும் புரியாத புதிராகவே உள்ளது. இங்கு ஏற்பட்ட தோல்வியே யப்பானின் வீழச்சிக்கும் வழிகோலியது என அன்றைய பிரித்தானிய பிரதமர் சேர் வின்சன்ட் சேர்ச்சில் கூறியதை மறக்க முடியாது.

நேர்த்தி வைத்து மன்றாடியதன் பலனாக இப்புதுமை நிகழ்ந்ததனால் இலங்கை மக்கள் அந்த நேர்த்திக் கடனைச் செலுத்திய விதத்தை இப்போது பார்ப்போம். இதன் பிரதான கடமை பேராயரையே சார்ந்திருந்தது. ஆனாலும் பேராயர் மசோன் ஆண்டகை 1947ஆம் ஆண்டு ஆடி மாதம் 28ஆம் திகதி இறைபதம் அடைந்தார். அதனால் அந்தக் கடமை அவருக்குப் பின்னர் பேராயரான இலங்கையின் புதல்வரான முதல் பேராயர் தோமஸ் பெஞ்சமின் குரே அ.ம.தி ஆண்டகையை சார்ந்தது. அவரும் இப்பாரிய பொறுப்பை சிரமேற்கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

மேலும் அவர் இறப்பர் தோட்டத்தை அண்டிய இடங்களை வாங்கி பசிலிக்கா இன்றுள்ள இடத்தில் நிறுவ சாரதரிசனத்துடன் செயற்பட்டார்.

பசிலிக்காவை கட்டுவதற்கான அத்திவாரத்தை வெட்டிய முதல் நாள் 1950ஆம் ஆண்டு ஆடி மாதம் 15ஆம் திகதியாகும். அதற்கான மூலைக்கல் வைத்த நாள் 1951ஆம் ஆண்டு மாசி மாதம் 04ஆம் திகதியாகும். கிட்டத்தட்ட 23 வருடங்களாக கட்டி முடிக்கப்பட்ட பசிலிக்காவை அபிஷேகம் செய்தது 1974ஆம் ஆண்டு மாசி மாதம் 06ஆம் திகதியாகும்.

முதலில் தேவத்தை லூர்து கெபி பழைய தேவாலயத்திற்கு கிழக்குப் பக்கமாக அதாவது இன்று கல்வாரி சிலுவை காணப்படும் இடத்திலேயே காணப்பட்டது. அன்றைய காலங்களில் நோயாளரை ஆசீர்வதித்தல், சிறுவர் தினம் போன்றன அங்கேயே நிகழ்த்தப்பட்டன.

மேலும் பசிலிக்காவை கட்ட ஆரம்பித்த வேளையிலேயே புதிய லூர்து கெபியையும், அமைக்க ஆயத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 1959ஆம் ஆண்டு மாசி மாதம் 11ஆம் திகதி இலங்கைக்கான திருப்பீடத் தூதுவர் அதிமேதகு பேராயர் றொனல்ட் நொக்ஸ் ஆண்டகையால் புதிய லூர்து கெபி ஆசீர்வதிக்கப்பட்டது. முதல் திருப்பலியை அன்றிருந்த அமல மரித் தியாகிகள் சபையின் மாகாணத் தலைவரான அருட்திரு டெசடலே அடிகளார் ஒப்புக்கொடுத்தார்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இத்தாலியில்



## 08.02.2014



# இலங்கை வாழ்





"இலங்கைக்கு வருமாறு எனக்கு விடுக்கப்பட்ட அழைப்பை நான் வரவேற்கின்றேன். நான் இலங்கைக்கு வருவதற்கு கடவுள் வழி ஏற்படுத்துவார் என்று நம்புகின்றேன்"



# திருத்தந்தை பிர


















# மக்களுடன்




# ...ான்சிஸ்










# விசுவாசத்தின் ஒளி

## திருத்தூது மடல் பகுதி 01

## அன்பினில் நம்பிக்கை வைத்தோம் (1யோவா 4:16)

17. எல்லாவற்றுக்கும் மேலாக அவரது உயிர்ப்பு எனும் ஒளியில் கண்ட கிறிஸ்துவின் இறப்பு, கடவுளின் அன்பின் மேல் முழு அளவு நம்பிக்கையைக் கொண்டு வந்துள்ளது. உயிர்த்தெழுந்து வந்ததால், இந்தக் கிறிஸ்துவே நம்பிக்கைக்குரிய சாட்சி, விசுவாசம் கொள்ளத் தகுதியானவர். (வெளி 1:5) நமது விசுவாசத்திற்குத் துணை நிற்க வல்லவர் (எபி 2:17). “கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே” (1 கொரி 15:17) என்று புனித பவுல் கூறுகின்றார். இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்ய தந்தையானவர் அன்பு காட்டாமல் போய் இருந்தால், இறந்த அவரது உடலை உயிரூட்டச் செய்யாமற் போயிருந்தால், அது ஒரு உண்மையான அன்பாக ஏற்கப்படாமல், சாவின் இருளுக்கு ஒளியூட்டப்பட்ட ஒன்றாக இருந்திருக்கக்கூடும். இறை இயேசுவில் இணைந்த தமது புதிய வாழ்வைக் குறித்து புனித பவுல், “இறைமகன் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் நான் இவ்வுலகில் வாழ்கின்றேன். இவரே என் மீது அன்பு கூர்ந்தார். எனக்காகத் தம்மையே ஒப்புவித்தார்” என்கின்றார். தந்தை தன் மகன் மீது வைத்த விசுவாசம், இறை இயேசுவின் மீது காட்டும் விசுவாசமே என்பதும். விசுவாசம் கொள்ள இவரே தகுதியானவர் என யூகிக்க வேண்டுமானால் அது நமக்கு சாகும் வரை அவர் நம்மீது காட்டிய அன்பு ஒன்றினால் மட்டுமல்ல, அவரும் தெய்வீகப் புதல்வர் என்ற காரணத்தினால் மட்டும் தான். சுருக்கக் கூறின், இயேசுவே இறைமகன். தந்தையோடு முழுவதுமாக இணைந்திருப்பவர். சாவையே வெற்றி கொண்டு நிறைவாழ்வை ஒளியேற்றச் செய்பவர். இந்த உலகில் உள்ள நமது பண்பாடுகள் பல கடவுளது உண்மையான முழுப் பிரசன்னத்தையும் செயல்பாடுகளையும் இழந்து நிற்கிறது. கடவுள் எல்லை கடந்து இருப்பவரென்றும், மற்றொரு சிந்தனைப்படி நமது உறவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் என்றும் நாம் நினைத்திருக்கின்றோம். கடவுள் இவ்வுலகை ஆள இயலாதவர் எனில், அவரது அன்பும் உண்மையான வலுப்பெற்றதாக இல்லாமல் உண்மையாக உணரப்படாமல், உண்மையாக இல்லாமலும், அது வாக்களித்த அருளையும் வழங்க இயலாமற்போயிருக்கும். நாம் விசுவாசம் கொள்கிறோமா இல்லையோ, எவ்வித வேறுபாடும் தோன்றியிருக்காது. ஆனால் இதற்கு மாறாக, கிறிஸ்தவர்களோ வரலாற்றையும் அதன் முடிவையும் நிர்ணயிக்கும் கடவுளின் காணக்கூடிய வல்லமையுள்ள அன்பினில், முழு விசுவாசம் காட்டுகின்றனர். இந்த அன்பினால் உறவை ஏற்படுத்தவும் முடியும் என்பதுடன், அதுவே கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும், உயிர்ப்பிலும் வெளிப்பட்டது எனவும் கூறலாம்.

18. விசுவாசம் கொள்ள இயேசு கொண்டு வந்த இந்த முழுமை நிலைக்க மற்றொரு சிந்தனைக் கருத்தும் எழுந்துள்ளது. விசுவாசத்தில், கிறிஸ்து என்பவர் நாம் நம்பும்படியான ஒருவர் மட்டுமே அல்லர். ஆனால் கடவுளின் மேம்பட்ட அன்பைத் தெளிவாக்கி விளக்கியவர். நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே நம்பிக்கை கொள்ள வேண்டி வந்தவர். விசுவாசம் என்பது இயேசு ஒருவரை மட்டுமே உற்று நோக்குவதல்ல, ஆனால் இயேசுவே தமது கண்களால் கண்ட அதே சிந்தனைக் கருத்துகளையும் கண்டு கொள்ளுதல் என்பதாம். எனவே அது அவரது பார்வையிலேயே நாம் பங்கு பெற்றுக் கொள்வதாகும். நம் வாழ்விலும் பல்வேறு துறைகளில் நம்மைவிட மேலாக அறிவு படைத்த பிறரில் நாமும் நம்பிக்கை வைக்கிறோம் அல்லவா? நம் வீட்டைக் கட்டும் கட்டிடக் கலைஞர் மீது நம்பிக்கை, நாம் குணம் பெற மருந்து தரும் மருத்துவர், வழக்குகளை எதிர்கொள்ளும் வழக்கறிஞர் ஆகியோர் மீது நம்பிக்கை. கடவுளைப் பொறுத்த மட்டில், நமக்கும் மிக நம்பிக்கையுடைய, உண்மையுடைய, அறிவுத்திறன் கொண்ட ஒருவர் தேவை அல்லவா? “கடவுள் தன்மை கொண்ட ஒரே மகனாகிய இயேசுவே கடவுளை வெளிப்படுத்தியுள்ளார்” (யோவா 1:18). கிறிஸ்துவின் வாழ்வும், தம் தந்தையை அறிந்து கொண்ட அவரோடு, இவர் இணைந்த முழுமையான உறவு ஆகியவற்றால் மனித இனத்திற்குத் தேவையான புதிய அணுகுமுறை திறக்கப்பட்டுள்ளது. “நம்பிக்கை கொள்ள” எனும் பதத்திற்கு உள்ள பல்வேறு பொருட்களில், நாம் இயேசு மீது கொள்ளவேண்டிய தனிப்பட்ட உறவின் முக்கியத்துவத்தைப் புனித யோவான் முன்வைக்கிறார். “அதனில் நம்பிக்கை” என்பது, நமக்கு இயேசு கூறியவை உண்மைகளே என்பதும், இயேசுவை “நம்புவதும்” இயேசுவில் “நம்பிக்கை வைப்பதும்” குறித்து யோவான் பிரித்து உரைக்கிறார். அவரது வார்த்தைகளையும், சாட்சியங்களையும் ஏற்றுக் கொள்ளும்போது அவரை “நம்புவது”, அவர் உண்மையானவர் என்பதால்தான். “இயேசுவில் நம்பிக்கை வைப்பது” என்பது நேரடியாக அவரை நம் உள்ளத்தில் ஏற்று, அதனில் பயணிப்பதும், அன்பினில் ஏங்கி இருப்பதும், வழி நெடுக அவரது பாதச்சுவடுகளைப் பின்பற்றுவதும்தான்.

அவரை அறிந்து, ஏற்று, அவர் சுவட்டில் நடக்க ஏதுவாக, இறைமகனே நமது உடலில் பங்கேற்கிறார். தனது தந்தையையும் நம்மைப் போலவே அன்புடன் மன்றாடியவாறு குறிப்பிட்ட முடிவு காலத்திற்குள் பயணம் செல்ல வழிநடத்துகிறார். கிறிஸ்தவ விசுவாசம் என்பது வார்த்தையை உடலோடு இணைத்து வாழ்வாக்கி, அவரோடு உயிர் பெற்று எழுத்தூண்டும் விசுவாசம். நமது மனித வரலாற்றில் நுழைந்தால் மிக நெருக்கமாகி விட்ட கடவுளோடு உறவு கொள்ளும் விசுவாசம். உண்மையினின்று விலகி ஓடாமல் கூறினால், கடவுளின் மகன் மீது வைத்த விசுவாசம் தான் நாசரேத்து இயேசுவை உதிக்கச் செய்து, சத்தியத்தின் உட்பொருளை நமக்கெல்லாம் உணர்த்தியுள்ளது. மேலும் கடவுள் இவ்வுலகை எவ்வளவுக்கு நேசிக்கிறார் என்பதையும், அவரிடம் செல்லும் பாதைக்குத் தொடர்ந்து வழிநடத்திச் செல்கிறார் என்பதையும் உணர்கிறோம். இவ்வுலகில் நமக்கு வழங்கப்பட்ட வாழ்க்கையினை மிகப்பெரிய பொறுப்புடனும், தீவிரமுடனும் வாழ்ந்து காட்டவும், இதுவே கிறிஸ்தவனாக வாழவும் நமக்கு வழிகாட்டுகிறது.

*தொடரும்*

# புனித பிரான்சிஸ் அசிசி – 17

மக்கள் அவரது தாழ்ச்சியைக் கண்டு பிரமித்துப் போயினர். இதைக் கண்ட பிரான்சிஸ் ஒரு சகோதரனை நோக்கி, "என்னைக் கேவலமாகக் கூப்பிடு, கல் நெஞ்சன், முரடன், உபயோகமற்றவன், ஒன்றுக்கும் உதவாதவன் என்றெல்லாம் சொல். இப்படிச் சொல்வதால் என்னைப் பற்றிய உண்மையை ஒருவராவது சொல்லக் கேள்விப்படுவேன்" என்று கூற, அதை மறுக்கமுடியாது அச்சகோதரர் அவ்வாறே செய்ய வேண்டியதாயிற்று.

சில சமயம், பிரான்சிஸ் தனிமையாக இருந்து செபித்து வந்தார். அச்சமயம் அலகை அவரை பயமுறுத்திச் சோதித்தது. அப்போது பிரான்சிஸ் மிகவும் துன்பப்பட்டார். தான் திண்ணமாக நரகத்திற்குப் போவதாகவும் நினைத்தார். இவ்வாழ்வைவிட்டு நீங்கி மணவாழ்வு வாழ எண்ணம் வந்தது. பின்னைய எண்ணத்தைக் கீழ்கண்டவாறு நகைச்சுவையோடு முறியடித்தார்.

அது பனி- பெய்யும் காலம். பனி- யினால் சில மனித உருவங்களைச் செய்தார். பிறகு அவைகளைப் பார்த்து, "பிரான்சிஸ் இதோ பார், அந்தத் தடியான உருவம் உன் மனைவி. அவ்வுருவங்கள் உன் மக்களும் வேலை- யாளும் ஆகும். அவர்களுக்கு உன்னால் உணவளிக்க முடியாது. எனவே அவர்கள் குளிரால் மடியப் போகிறார்கள். ஆதலால் நீ இறைவனுக்குத் தொண்டாற்றுவதிலே மகிழ்ச்சியாயிரு" எனத் தனக்குள்ளே சொல்லிக் கொள்வார்.

பிரான்சிஸ் எழில்மிகு பூக்களையும், வண்ணமிகு பறவைகளையும் மிருகங்களையும் நேசித்தார். இவை கடவுளின் படைப்பு என்பதையும், அவை கடவுளைப் புகழ உதவுபவை என்பதையும் உணர்ந்தார். ஒரு சமயம் ஒரு வலையிலிருந்து ஒரு சிறிய முயலை விடுவிக்க பின் அது அவரை விட்டுப் போக மறுத்தது. அவர் சில காட்டுப் புறாக்களை வளர்த்து வந்தார். ஒரு சமயம் ஓர் ஆற்றின் கரையில் மீன் பிடிப்போர் ஒரு மீனை இவருக்குப் பரிசாக கொடுக்க அதை மீண்டும் அதே ஆற்றில் எறிந்துவிட்டார்.

ஒரு சமயம் ஒரு காட்டில் பலவிதமான பறவைகளைக் கண்டார். பிரான்சிஸ் அருகில் சென்று அவைகளைப் பார்த்து "என் சகோதரப் பறவைகளே, இறைவன் உங்களுக்கு அருமையான உடை- களையும், இனிமையான குரல்களையும் கொடுத்துள்ளார். உங்களுக்கு உணவாக தானியங்களையும் கொடுத்துள்ளார். நீங்கள் கூடுகட்டி வாழ மரங்களைப் படைத்துள்ளார். எனவே நீங்கள் இறைவனைப் புகழ வேண்டும்" என்று கூற, பறவைகள் மகிழ்ச்சியால் சிறகடித்துப் பறக்க, அவைகளை ஆசீர்வதித்தார்.

**தொடரும்**




**கேள்வி எண் 17**

1) "என்னைக் கேவலமாகக் கூப்பிடு" என யாரிடம் பிரான்சிஸ் கூறினார்?

2) பிரான்சிஸ் பறவைகளிடம் என்ன கூறினார்?

**அனுப்ப வேண்டிய கடைசி திகதி : 24.02.2014**

## புனித பிரான்சிஸ் அசிசியின் தொடருக்கான விடைகளை எழுதி பாராட்டைப் பெறுபவர்கள்.

1) அ.மதுமிகா, தரம் 8, நல்லாயன் மகளிர் மகா வித்தியாலயம், கொட்டாஞ்சேனை கொழும்பு –13.
2) ஜேசுதாசன் கெலிஸ்டர், தரம் – 5B, நு/சேன் போர்ட் கனிஷ்ட கல்லூரி, நானுஓயா
3) ஷாமினி சிமியோன், தரம் 8F, திருக்குடும்ப கன்னியர் மடம், பம்பிலப்பிட்டி.
4) A.X ஆன் மார்டீனா, தரம் 9, லூர்து அன்னை திருத்தலம், பாசையூர், திருகோணமலை
5) ந. அனஸ்ரினா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.

# கல்வி உன்னைக் காக்கும்

"படிப்பு படிப்பு, எந்த நேரம் பார்த்தாலும் படிப்புத்தானா? புத்தகங்களைக் கட்டுக் கட்டாய்ச் சுமக்க வேண்டும். அம்மா ஒரு நாளும் விளையாட விடமாட்டா" சந்திரனின் மனம் பொருமியது. அம்மா மட்டுமல்ல அப்பாவும் படி, படி என்று கூறிக் கொண்டே இருப்பார்.

"நல்ல வசதி, காணி நிலம், வங்கியில் பணம் எல்லாம் இருக்கும் போது ஏன் என்னைப் படி படி என்று நெருக்குகிறார்கள்?" என்று கலங்கினான். இப்படி இருக்கும்போது யுத்தத்தால் வீடு வாசல்களை விட்டு இடம் பெயர நேரிட்டது. சொத்துக்களை எல்லாம் விட்டு விட்டு கையில் கிடைத்ததைக் கொண்டு ஊருக்குச் சென்றனர். அங்கே ஒரே செல் அடி, ஒருவாறு பங்கருக்குள் ஒழிந்துக் கொண்டனர். யுத்தமும் உக்கிரம் அடைந்தது. பலர் இறந்துவிட்டனர். ஆனால் சந்திரனும் அவனது பெற்றோரும் காப்பாற்றப்பட்டனர்.

இறுதியில் மக்களோடு மக்களாக அகதிகள் முகாமுக்கு வந்து சேர்ந்தனர். அங்கு வசதியில்லை, நேரத்திற்குச் சாப்பாடில்லை, உடுப்பில்லை, அப்போது தான் சந்திரன் தீர்மானம் எடுத்தான். "நான் நல்லாய்ப் படிக்கவேணும், படிச்சு முன்னுக்கு வந்து அம்மா அப்பாவைக் காப்பாற்ற வேணும். எங்கட சமுதாயத்திற்கும் நல்லது செய்ய வேணும்" என்று மனதில் அடிக்கடி சொல்லிக் கொள்வான்.

அகதிகள் முகாமில் பாடசாலை மாணவர்- களுக்கு வகுப்புக்கள் இலவசமாக வைத்தனர். அங்கு கொப்பி புத்தகங்களும் கொடுத்தார்கள். சந்திரன் நன்றாகப் படித்தான். வகுப்பு முடிந்ததும் சாப்பாட்டிற்கு வரிசையில் நிற்க வேண்டும். அப்போதுதான் ஒரு சாப்பாட்டுப் பார்சல் கிடைக்கும். இப்படிக் கஷ்டப்பட்டுப் படித்தான். படிப்படியாக ஒவ்வொரு குடும்பமும் வேறாகச் சமைக்க ஆரம்பித்தார்கள். வீட்டிலுள்ள வசதிகள் அகதிமுகாமில் இல்லை. மலசலம் கழிப்பதற்கு வரிசையில் நிற்கவேண்டும்.

இத்தனை கஷ்டத்துக்குள்ளும் சந்திரன் நன்றாகப் படித்தான். ஒரு நாள் சந்திரனின் அப்பாவுக்கு நெஞ்சுவலி வந்தது! வைத்தியசாலைக்கு அம்புலன்சில் கொண்டு போகும் வேளையில் அப்பா இறந்து விட்டார். இது சந்திரனுக்கும் அம்மாவுக்கும் தாங்க முடியாத வேதனையைத் தந்தது. அப்பாவின் இறுதிக் கிரியைகள் முடிந்தன. மனதில் கவலை. இப்போ அப்பாவும் இல்லை. நான் அம்மாவைக் காப்பாற்ற வேண்டும் என்ற மன உறுதியோடு நன்றாகப் படித்தான். பரீட்சை எழுதினான். நல்ல பரீட்சை முடிவும் வந்தது.

அத்தோடு சிறிய வேலையும் கிடைத்து விட்டது. அந்த வேலையையும் செய்து கொண்டு மிகுதி நேரத்தில் சந்திரன் படித்தான். இப்போது அம்மாவையும் காப்பாற்ற சிறு வருமானமும் வரத் தொடங்கியது. முயற்சியோடு சந்திரன் பல கஷ்டங்கள் மத்தியிலும் படித்ததால் சிறு வேலையாவது கிடைத்தது. அதிலிருந்து அவன் முன்னேற முயற்சி செய்தான்.

சந்திரனின் கல்வியே இப்போது அவனை காக்க ஆரம்பித்தது. எனவே கல்வியில் கருத்தாய் இரு. ஒரு நாள் கல்வி உன்னையும் காக்கும்.

**'கற்கை நன்றே கற்றை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'**

**ஆக்கம் :**
**ஐ. ஸ்டெப்பான், தரம் 9,**
**புனித அந்தோனியார் கல்லூரி, கொழும்பு – 13.**

## புனித சூசையப்பர்



- தாவீது அரசரின் கீர்த்தி பெற்ற புத்திரன் சூசையப்பர்.
- இவர் இயேசுவின் வளர்ப்பு தந்தை ஆவார்.
- திருக்குடும்பத்தின் தலைவர்.
- இவர் தச்சுத் தொழில் செய்பவர்.
- இவர் ஒரு நீதிமான்.
- இவர் கன்னி மரியாவின் கற்புள்ள காவலர்.
- இவர் பசாசுகளை நடுநடுங்கச் செய்பவர்.
- இவர் கஸ்திப்படுபவர்களுக்கு ஆறுதலாக விளங்குகின்றார்.
- இவர் ஒரு புனிதராய் இருப்பதால் நாம் இவருக்கு மரியாதை செலுத்த வேண்டும்.

**ஆக்கம் :**
**J.D. எண்ஜலினா, தரம் 6, சதாசகாய மாதா மறைப்பாடசாலை, பாரக்கடுவ (இரத்தினபுரி)**

## இயேசு செய்த புதுமைகள்



- தண்ணீரை இரசமாக்கினார்
- கடல் நடுவில் நடந்தார்
- ஊமையரை குணமாக்கினார்
- 5000 மக்களுக்கு உணவளித்தார்
- மீன் இல்லை என்ற இடத்தில் மின் பிடிக்கச் செய்தார்.

**ஆக்கம் : பிரசன்னா பிலேந்திரன், தரம் – 7, புனித பேதுரு கல்லூரி**

## புதுச்செட்டித்தெரு, புனித வியாகுல மாதா மறைப்பாடசாலையில் கல்வி கற்கும் தரம் 2 மாணவர்களின் சித்திரங்கள்



இமான் குளோவிஸ் பர்னாந்து



ட்ரவோன்




A. ருக்ஷனா



இடோனியா



N. ஆன்



பிறிசில்லா



றொசானி



மெல்வின்



ஜெஸ்வின்



அந்தோனி லியோனஸ் பர்னாந்து

# கேட்டல், கவனித்தல், கற்றல்




## சென்ற இதழின் தொடர்ச்சி

எதைத் தெரிந்து கொள்ள வேண்டும், எதைக் கற்கவேண்டும், எதில் தேர்ச்சியடைய வேண்டும் என்று தீர்மானிக்காமல் ஒரு கணம் சுடர்விட்ட ஆசையிலெல்லாம் பாய்ந்தால் தீபம் தீண்டிய விட்டிலாக மனம் சுண்டிவிடும். தெரிந்துகொள்ள வேண்டியவை, கற்க வேண்டியவை இரண்டும் வேறாகும். நான் ஓர் இசையமைப்பாளனாக ஆகவேண்டுமென்றால் இசையில் உள்ள பல பிரிவுகளையும், பல விஷ-யங்களையும் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். பிறகு இசையின் இலக்கணத்தைக் கற்கவேண்டும். எனக்கு இசை பிடிக்குமென்றால் இசையில் உள்ள பல பிரிவுகளைப் பற்றித் தெரிந்துகொள்வது தவறில்லை.

இசைக் கலைஞனாகும் எண்ணம் இல்லாதபோது, பொழுதுபோக்காகவும் இசைக்கு வாழ்வில் முக்கியத்துவம் இல்லாதபோது இசையின் இலக்கணங்களைக் கற்க முயல்வதும் தேவையில்லை. பிடிக்கும் என்பதற்கும், ஆர்வம் உள்ளது என்பதற்கும் வித்தியாசம் உண்டு. ஆர்வம் இல்லாமல் கொஞ்சம் பிடிக்கும் என்னும் விஷயங்களைக் கற்க ஆரம்பித்தால் முழு கவனமும் அதில் செலுத்த முடியாமல் போகும்.

நாம் கற்றுக் கொள்ளும் விஷயங்கள் வாழ்வில் பல இருக்கும். சைக்கிள் ஓட்டுவதிலிருந்து கணணிப் பொறியியல் வரை ஒரே நபர் பல விஷ-யங்களை கற்கலாம். ஆனால் ஏதேனும் ஒன்றில் தேர்ச்சியடைய முயல்வதில்தான் வெற்றி கிடைக்கும். தேர்ச்சியடைய வேண்டும் என்று நாம் தீர்மானிக்கும் விஷயம் நம் வாழ்வில் மேலும் வளமும் நலமும் கூட்டுமாறு அமையவேண்டும். கணணிப் பொறியி-யாளர் கற்றுக்கொண்டே கொஞ்சம் போதும் என்று தீர்மானித்து தன் சிரத்தை, சிந்தனை எல்லாவற்றையும் வேறெதிலாவது செலுத்தினால் சிரமம்தான்.

நிறைய கற்க வேண்டும் என்பது நல்ல சிந்தனை. ஆனால் செயல்படும்போது நம்மில் வெகு சிலருக்கே ஒரே நேரத்தில் பலவற்றிலும் தேர்ச்சி பெறும் திறனும், சக்தியும் உள்ளது. பாலமுரளிகிருஷ்ணா பாடுவதிலும் வயோலா வாசிப்பதிலும் திறமை உள்ளவர் என்பதால் இசைக் கலைஞர்கள் எல்லோரும் அவர்போல் ஆக முயலத் தேவையில்லை.

கவனம் செலுத்திக் கற்க முயலும் போதும் கூடச் சிலருக்கு முழுதாய் மனதில் பதிவதில்லை. இதற்குக் காரணம் சூழலின் இறுக்கம் மட்டுமல்ல, உடலில் ஏற்படும் சோர்வும் கூட இருக்கலாம். உடலினால் எப்படி மனம் கவனம் செலுத்த முடியாது என்று கேட்டால் பசியோடு பாடம் படித்துப் பாருங்கள். தூக்கம் வரும்போது தட்டெழுத்து பயின்று பாருங்கள். உடல் முறையாய் செயல்பட்டால் மனமும் தெளிவாய் இருக்கும். உடலினைப் பற்றிக் கவலைப்படாமல் பல முனிவர்கள் கவனம் சிதறாமல் தவம் இருந்தார்களே என்றால் அதற்குக் காரணம் அந்தத் தவத்திற்கு முன் அவர்கள் உடலினைத் தயார் செய்து கொண்டதுதான். பசி, தூக்கம் எது வந்தாலும் உடல் இளைப்பாறாமல் தொடர்ந்து கற்பேன் என்று வெறியுடன் இயங்கினால் பலன் இறுதியில் தேவையான அளவு இருக்காது.

சூழலின் இறுக்கமும் நம்மைக் கவனிக்கவிடாமல் செய்யக்கூடும். வீட்டில் பிரச்சினைகள், உணர்ச்சிகளில் குழப்பம், பணத் தட்டுப்பாடு போன்றவையும் கவனத்தைக் குறைக்கும். நம் சூழலை நாம் மாற்ற முடியாது என்றால் நம் அணுகுமுறையை மாற்றவேண்டும். இன்று கற்றல் நாளை பிரச்சினையை எதிர்நோக்கல் என்று ஒரு நிச்சயமான அட்டவணை தயாரித்துக்கொண்டு இயங்குவதுதான் இதற்கு வழி, இப்படி நம் எண்ணம் சிதறுவதைக் கட்டுப்படுத்த இயலாமல் போகும்போது விபரமறிந்தவர்களின் உதவியை நாடவேண்டும்.

“இதெல்லாம் மீறி என்னால் முடியவில்லையே..” என்றும் சிலர் கூறுவதுண்டு. முடியாத நிலை என்பது நிச்சயமல்ல, அதற்கு மாற்றுவழி உண்டு. முயன்றால் முடியாதது இல்லை. முயற்சியின் தீவிரம், அளவு ஆகியவையே மாறுபடும். விஸ்வநாதன் ஆனந்த் ஆடிய ஆட்டத்தை அப்படியே நானும் ஆட முடியும். - முயன்றால், ஒரே விஷயம் அவர் இருபது நிமிடங்களில் முடித்ததை நான் மூன்று நாட்களில் முயன்று முடிப்பேன். இதுதான் முடியும் என்பது எப்படியும் முடியும் என்று தெரிந்து கொண்டபின் தேவைப்பட்டால் வாழ்வுக்கு அது அவசியமானால் முயற்சியை செழுமைப்படுத்த முயலலாம். பழக்கத்தின் மூலம் முயற்சியின் அளவும் தீவிரமும் வேண்டிய விதத்தில் நமக்கு அமையும்.

கற்கவேண்டும், கற்றால்தான் வெற்றி கிட்டும் என்பது சத்தியம். கற்பது என்பது நூல்களை மட்டுமல்ல, கல்லூரி, பாடசாலையின் பாடங்களை மட்டுமல்ல, வாழ்வதையும் கற்றால்தான் வெற்றியோடும், வசதி-யோடும் வாழ முடியும். வாழ்க்கையை கற்றுக் கொள்ளத்தான் இன்னும் அதிகமாய் கவனம் செலுத்த வேண்டும்.

முற்சாய்வு இல்லாமல், முன்னேறும் வழி என்று தீர்மானித்து வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு பொழுதும் கவனத்தோடு செயல்பட்டால் வெற்றி நிச்சயம். எப்போதும் எல்லோரிடமும் கவனத்தோடு இருப்பது இயலாது. முடிந்தவரை தேவையான நமக்கு முக்கியமான நேரங்களில் கவனம் செலுத்தவேண்டும்.

“கவனம் செலுத்தினால் பலவும் புரியும்
கவனம் செலுத்தினால் பார்க்கத் தெரியும்
பார்க்கத் தெரிந்தால் பாதை தெரியும்
பிறகு சுலபமாக வாழலாம்”.

*முற்றும்.*

## பொது அறிவு

- ✷ தமிழில் சுருக்கெழுத்து முறையை அறிமுகம் செய்தவர் - சீனிவாசராவ்
- ✷ முதலாவது செல்போன் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு - 1960
- ✷ அவுஸ்திரேலியாவைக் கண்டு பிடித்தவர் - கப்டன் ஜேம்ஸ் குக்
- ✷ உலகில் அதிகம் பேசப்படும் மொழி - மாண்டரின் (சீனமொழி சுமார் 120 கோடி பேர் பேசுகின்றனர்)
- ✷ இணையம் தொடங்கப்பட்ட ஆண்டு - 1969
- ✷ உலகில் ஒரு நாள் மட்டும் ஜனாதிபதியாக இருந்தவர் - போக் (அமெரிக்கா)
- ✷ ஆங்கிலத்தில் சுருக்கெழுத்து முறையை அறிமுகம் செய்தவர் - சேர். ஐஸக் பிட்மேன்
- ✷ உலகில் மிக உயர்ந்த தொலை தொடர்பு கோபுரம் - CNN டவர், (கனடாவில் ரொரின்டோவில் அமைந்துள்ளது. உயரம் - 553m)
- ✷ தமிழ் அகராதியை முதன் முதலில் தொகுத்தவர் - கதிரவேற்பிள்ளை
- ✷ ஆசியாவில் அமைந்துள்ள ஒரேயொரு கிறிஸ்தவ நாடு - பிலிப்பைன்ஸ்
- ✷ உலகில் மிகப் பெரிய பௌத்த ஆலயம் அமைந்துள்ள நாடு - லும்பினி, நோபாளம், உயரம் 41.5m
- ✷ நோபல் பரிசை அறிமுகம் செய்தவர் - அல்பிரட் நோபிள் (சுவீடன்)
- ✷ உலகில் பெரிய கால்பந்து மைதானம் அமைந்துள்ள இடம் - பிரேசில் (ரியோடி ஜெனீரா)

*தகவல் :*
*சு. ஜெயராஜ் கலைப்பிரிவு (2014)*
*புனித அந்தோனியார் கல்லூரி, கொழும்பு - 13.*

## அறிந்து கொள்ளுங்கள்

- ✷ இலங்கையிலுள்ள கட்சிகளின் பிரதான பழமை வாய்ந்த கட்சி “லங்கா சமசமாஜி” கட்சியாகும். 1935ஆம் ஆண்டு 18ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.
- ✷ இலங்கையில் புகையிரதப் பாதை இல்லாத இடம் கதிர்காமம்
- ✷ இலங்கையில் தாவரப் பூங்கா அடைந்துள்ள இடம் ஹக்கல
- ✷ இலங்கையின் முதலாவது கோப்பித்தோட்டம் 1823ஆம் ஆண்டில் கம்பளையில் ஆரம்பமானது.
- ✷ இலங்கையின் சுதந்திர போராட்டத்தின் ஆணைக்குழு சோல்பரி ஆணைக்குழுவினர்

**ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு - 12**




**நாளைய உலகம் உன்**
**பெயரைக் கூற**
**நான்கு திசையும் உன்**
**புகழ் பாட**
**நால்வர் உன்னைப்**
**போற்றிப் புகழ**
**‘நான்’ என்று நீ கூற**
சாதித்துப் பார்!

**வறுமை உனக்குத்**
**தடையல்ல**
**வாழ்வை நீ வென்றிட**
**உலகம் உன் வசப்பட**
**வானை நீ எட்டிட**
சாதித்துப் பார்!

**பிறந்தோர் எல்லாம்**
**இறந்தனரே!**
**சாதனையாளரே**
**வாழ்ந்தனரே!**
**இறந்த பின்னும்**
**வாழணுமா?**
**இவ்வுலகம் உன்னைப்**
**போற்றணுமா?**
சாதித்துப் பார்!

**சிறிய நாட்டில் பிறந்தாலும்**
**சிறிய வீட்டில் இருந்தாலும்**
**சிறியவனாய் நீ இருந்தாலும்**
**பெரிய இடத்தை**
**நீ அடைந்திட**
சாதித்துப் பார்!

**‘சாதிப்பேன்’ என்று நீ கூறு**
**சாட்டை எல்லாம்**
**தள்ளிவிடு**
**மாட்டாய் என்று யார்**
**சொன்னாலும்**
**முடியும் என்று நீ**
**நினைத்தால்**
சாதித்துப் பார்!

**சராசரி மனிதனாய்**
**வாழாதே!**
**சாதனையாளராய்**
**மாறிடவே!**
**சற்று நீ யோசித்தால்**
**சாதிப்பை நீ ருசிக்கலாமே!**
சாதித்துப் பார்!

**சாதனைக்கு இல்லை**
**ஓர் எல்லை**
**சாதிக்க துணிந்தால்**
**வானமே உன் எல்லை**
சாதித்துப் பார்!
**நீயும் ஓர் நாளில்**
**சரித்திரம் படைப்பாய்**



*ஆக்கம் :*
*ந.ஜே. டானியல் கிறிஸ்ரி,*
*தரம் - 10, புனித அந்தோனியார்*
*கல்லூரி, கொழும்பு - 13.*

## சம்பவங்களும் சாதனைகளும்



### திறமைகள் தோற்பதில்லை

தாமஸ் ஆல்வா எடிசன் மின்விளக்கு முதல் பலநூறு புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டறிந்த உலகம் அறிந்த விஞ்ஞானி. தனக்குக் கிடைத்த அத்தனை லாபத்தையும் முதலீடு செய்து அவர் உருவாக்கியிருந்த அவரது மிகப் பெரிய ஆய்வுக்கூடம் 1914ஆம் ஆண்டு முழுவதுமாக தீப்பிடித்து எரிந்தது. அப்போது எடிசனின் 24 வயது மகன் அவரைத் தேடிக் கொண்டிருந்த போது அவர் ஆய்வுக்கூடத்துக்கு வெளியே நின்று எரியும் ஆய்வுக்கூடத்தை பார்த்துக் கொண்டிருந்தார். வேதனையோடு அங்கு ஓடிவந்த மகனிடம் “உன் தாயை அழைத்துக் கொண்டு வா, அவளது வாழ்நாளில் இப்படியொரு தீ விபத்தைப் பார்த்திருக்க மாட்டாள்” என்று பொறுமையோடு கூறினார். மேலும் “மகனே இந்தப் பெரிய அழிவிலும் நமக்கு ஒரு பெரிய உதவி காத்திருக்கிறது. ஆம் நம் குறைபாடுகள் எல்லாம் இத்தோடு அழிந்துவிட்டன” என்று கூறிய எடிசனின் அப்போதைய வயது 67. இந்தத் தீ விபத்து நடந்த மூன்றே வாரங்களில் ஃபோனோகிராபைக் கண்டறிந்து உலகிற்கு வழங்கியவர் எடிசன் என்றால் சாதனைதானே!

தன்மீதும், தன் திறமைகள் மீதும் நம்பிக்கை கொண்டவர்களை வெளிப்புறத் தோல்விகள், தாக்குதல்கள் ஒன்றும் செய்வதில்லை.

பெரிய வெற்றிகள் கிட்டும் போதும்,
பெரிய தோல்விகள் ஏற்படும் போதும்
அமைதியுடன் செயல்பட வேண்டும்.

*- பெர்ட்ரண்ட் ரஸ்ஸெல்*



03

# ஆலய வரலாறுகள்

# தூய பனிமய அன்னை



கி.பி 1535ஆம் ஆண்டு புனித சவேரியார் தூத்துக்குடிக்கு வந்தபோது அங்கே புனித பேதுரு ஆலயம் மட்டுமே இருந்தது. சவேரியாரின் மறைப்பணியைத் தொடர்ந்து 1579இல் இயேசு சபையினர் தங்கள் தலைமை இல்லத்தை தூத்துக்குடிக்கு மாற்றினர். தூத்துக்குடி மக்கள் தங்களுக்கென்று ஓர் ஆலயத்தை உருவாக்க விரும்பினர்.

இயேசு சபையின் தலைமை இல்லத்துடன் இணைந்து "இரக்கத்தின் மாதா" ஆலயத்தை உருவாக்கினர். 1600ஆம் ஆண்டு வரை இரக்கத்தின் மாதா பெயரில் அழைக்கப்பட்ட ஆலயம் நாளடைவில் "பனிமய மாதா ஆலயம்" என்று அழைக்கப்பட்டது. ஆண்டுதோறும் ஆவணி 5ஆம் திகதியன்று திருவிழா கொண்டாடப்படுகிறது.

தூத்துக்குடி மக்களால் பக்தியுடன் "பெரிய கோவில்" என்று அழைக்கப்படும் பனிமய அன்னை ஆலயம் சாதி, மத பேதமின்றி அனைவரும் போற்றும் ஓர் அரிய இடமாகத் திகழ்கிறது. இவ்வாலயம் பழமையும், வரலாற்றுச் சிறப்பும் மிக்கது.

1733ஆம் ஆண்டில் இயேசு சபைத் தலைவர் பிரான்சிஸ் கோரெட்ஸ் என்பவருக்குச் சமர்பித்த இயேசு சபை அறிக்கையில் தந்தை ஜான் அந்துனஸ் பனிமய அன்னை ஆலயத்தை ஒரு "பேராலயம்" (Basilica) என்று குறிப்பிட்டுள்ளார். 1960ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31ஆம் நாள் தூத்துக்குடி பனிமய அன்னை ஆலயத்தை புனித நகரான உரோமபுரியில் எஸ்கலின் குன்றின்மேல் அமைந்திருக்கும் மேரி மேஜர் பேராலயத்தின் ஓர் அங்கமாக அறிவித்தார்.

1982ஆம் ஆண்டு ஆவணி 5ஆம் நாள் இவ்வாலயம் தனது 400வது ஆண்டின் நிறைவு விழாவினை இனிதே கொண்டாடியது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த இனிய நிகழ்வின் நினைவுப் பரிசாக திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 1982ஆம் ஆண்டு ஆனி 30ஆம் நாள் தூத்துக்குடி பனிமய அன்னை ஆலயத்தை பேராலயம் என்ற சிறப்பு நிலைக்கு உயர்த்தினார்.

கி.பி 352ஆம் ஆண்டில் இத்தாலி நாட்டில் உள்ள உரோமை மாநகரில் மரியன்னைக்கென்று ஓர் ஆலயம் உருவானது. உரோமையில் இருந்த ஜான் என்பவருக்கு தேவ அன்னை கனவில் தோன்றி எஸ்கலின் மலையின் மேல் எனக்கொரு ஆலயம் கட்டவும் என்று கேட்டுக்கொண்டார். அதே இரவில் திருத்தந்தை லிபேரியுஸ் அவர்களின் கனவிலும் அன்னை தோன்றி அதே கருத்தினை வெளிப்படுத்தினார். செல்வந்தர் ஜானும், திருத்தந்தையும் ஒரே காட்சியைக் கண்டனர். ஆகவே ஒருமித்த சிந்தனையுடன் மரியன்னை குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றனர். பனி பெய்யப்படாத காலகட்டத்தில் அன்று அந்த எஸ்கலின் குன்றின்மீது பனி பெய்திருந்தது. ஆலயம் கட்டுவதற்கான இடத்தையும், அதன் மாதிரி அளவையும் அதிசயப் பனி வழியாக அன்னையே குறிப்பிட்டுக் காட்டியிருந்தார்.

அன்னையின் வேண்டுகோளை ஏற்ற திருத்தந்தையும், செல்வந்தர் ஜானும் அந்த இடத்தில் ஆலயம் கட்டத் தொடங்கினர். கி.பி 352இல் தொடங்கிய திருப்பணி நடந்து நிறைவுபெற்றது. திருத்தந்தை லிபோரியுஸ் அவர்களால் அர்ச்சிக்கப்பட்ட இவ்வாலயம், திருத்தந்தை மூன்றாம் சிக்ஸ்துஸ் (423 - 440) அவர்களால் புதுப்பிக்கப்பட்டது.

"பனிமய மாதா பேராலயம்" (St. Mary Major) என்றழைக்கப்படும் இவ்வாலயம் தான் அன்னை மரியாவுக்கு என்று உலகிலேயே முதலில் உருவான ஆலயம் ஆகும். இதுவே பழமை வாய்ந்த தலைசிறந்த அன்னையின் திருத்தலமாகும்.

அன்னை காட்சியளித்த ஆவணி 5ஆம் நாளை



நினைவூட்டும் வகையில் ஆண்டுதோறும் ஆவணி 5ஆம் நாள் பனிமய மாதாவின் திருநாள் உலகெங்கிலும் உள்ள பனிமய மாதா தேவாலயங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

எஸ்கலின் மலை மீது கோடைக் காலத்தில் அன்னை அதிசயப் பனி பெய்ய வைத்த அற்புத புதுமையை நினைவுபடுத்தும் வகையில் ஆண்டு தோறும் உரோமாபுரியில் திருவிழா நாளன்று ரோஜா மலர் இதழ்களை ஆலய உச்சியிலிருந்து தூவுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இயேசு பிறந்ததும் அவரைக் கிடத்திய தொழுவத் தொட்டில் பெத்லகேமிலிருந்து கொண்டு வரப்பட்டு அரிய பொக்கிஷமாக இவ்வாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் இயேசு தோளில் சுமந்து சென்ற சிலுவையின் ஒரு பகுதியும் பத்திரமாக வைத்து பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

அன்னை மரியாவையும், குழந்தை இயேசுவையும் ஓவியமாக புனித லூக்கா வரைந்த படமும் இவ்வாலயத்தில் உள்ளது.

**வரலாறு தொடரும்...**

## இதோ! இவரை விடவா உங்களுக்கு தோல்விகள் அதிகம்..?



- 1831இல் வியாபாரத்தில் தோல்லி
- 1832இல் சட்டசபைத் தோல்லி
- 1834இல் வியாபாரத்தில் மீண்டும் தோல்வி
- 1835இல் அவரது காதலி மரணம்
- 1836இல் அவருக்கு நரம்பு நோய் வந்தது
- 1838இல் தேர்தலில் தோல்வி
- 1843இல் காங்கிரஸ் தேர்தலில் தோல்வி
- 1848இல் மீண்டும் காங்கிரஸ் தேர்தலில் தோல்வி
- 1855இல் செனட் தேர்தலில் தோல்வி
- 1856இல் துணை அதிபர் தேர்தலில் தோல்வி
- 1858இல் செனட் தேர்தலில் மீண்டும் தோல்வி
- 1861இல் அமெரிக்க அதிபர் தேர்தலில் வென்று அமெரிக்க ஜனாதிபதியானார்.

இத்தனை தோல்விகளையும் சந்தித்தவர் வேறுயாருமில்லை... உலகம் அறிந்த மிகவும் பிரபல்யமான அமெரிக்க அதிபர் **ஆபிரகாம் லிங்கன்தான்.** அதிக தோல்விகள், அதிக பாடங்கள் இவையே வெற்றியின் இரகசியம்...!!

## 107 ஆண்டுகளாக குற்றங்களே நடக்காத ஓர் அதிசய கிராமம்

இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் 107 ஆண்டுகளாக எவ்வித குற்றங்களும் நடக்காத குற்ற வழக்குகள் பதிவாகாத அதிசய கிராமம் ஒன்று உள்ளது. சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள பூல்ஜர் கிராமத்திலுள்ள காவல் நிலையத்திற்கு கடந்த 107 ஆண்டுகளாக அக்கிராம மக்களிடமிருந்து ஒரு புகார் கூட வந்தது இல்லையென்று காவல்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பூல்ஜர் கிராமத்தில் அனைத்து தரப்பு மக்களும் தங்களுக்குள் பாகுபாடு இன்றி வாழ்வதால் ஜாதி, மதக் கலவரங்கள் ஏற்பட்டதில்லை. பெண்கள் சுதந்திரமாக வெளியில் சென்று வருகின்றனர். யாரும் பலாத்காரம் செய்யப்பட்டது கிடையாது. திருடர்களின் பயம் அறியா-ததால் திருட்டு என்பதே இக்கிராம மக்களுக்கு தெரியாமல் உள்ளது என்று கூறப்படுகின்றது. தங்களுக்குள் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகள், கிராம அவைக்கு முன் வைக்கப்படுகிறது என்றும், அங்கு சமரசமான முடிவு எட்டப்படுவதால், எந்த தரப்பினரும் கிராம அவையின் முடிவை எதிர்த்து, இதுவரை காவல் நிலையம் சென்று புகார் அளித்தது கிடையாது என்றும் கூறப்படுகின்றது. இதுகுறித்து கோர்பா மாவட்ட காவல்துறை அதிகாரி பேசுகையில் பூல்ஜர் கிராம மக்கள் இதுவரை எவ்வித அசம்பாவித சம்பவங்களிலும் ஈடுபட்டது கிடையாது. கோர்பா காவல் நிலையத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமங்களிலும் குற்றச் செயல்கள் நடைபெறுகின்றன. ஆனால் இக்கிராம மக்கள் விதிவிலக்காக உள்ளனர். இவர்களின் செயல்பாடுகளுக்காக சத்தீஸ்கர் மாநில அரசு இக்கிராமத்தை சிறந்த கிராமமாக அறிவித்து, விருது வழங்கியுள்ளது என்று கூறினார்.

## எலிகளிலிருந்து பரவும் ப்ளேக் எதிர்காலத்தில் மீண்டும் தோன்றலாம்.





பழங்காலத்தில் இருந்த "ப்ளேக்" எனப்படும் ஒரு வகையான கொள்ளை நோயைப் போலவே கொடூரமான ஒரு கொள்ளை நோய், எலிகள் போன்ற உயிரினங்களிடமிருந்து உருவாகும் ஆபத்து இருப்பதாக அமெரிக்க அறிவியலாளர்கள் எச்சரித்துள்ளனர். ஆறாம் நூற்றாண்டிலும், 14ஆம் நூற்றாண்டிலும் பல இலட்சக்கணக்காக உயிரிழப்புக்களுக்குக் காரணமான "ப்ளேக்" எனப்படும் கொள்ளை நோய்க்கு எலிகள் போன்ற உயிரினங்களிடமிருந்து உருவாகிய கிருமியே காரணம் எனக்கூறும் ஆராய்ச்சியாளர்கள், இத்தகைய நோய் மீண்டும் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பினும், அந்த நோய் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதை நவீன சிகிச்சைகள் தவிர்க்கும் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டுள்ளனர்.

ப்ளேக் எனப்படும் கொள்ளை நோயினால் ஆறாம் நூற்றாண்டில் 3 கோடிக்கும் அதிகமான மக்களும், 14ஆம் நூற்றாண்டில் 5 கோடிக்கும் அதிகமான மக்களும் உயிரிழந்துள்ளனர்.

# இன்றைய குழந்தைகள் நாளைய திருச்சபை

## கற்பு நெறி தவறாமல் வளர்க்கலாமே!



**கிறிஸ்துவில் அன்பு மக்களே, உங்கள் குழந்தைகளை அன்பானவர்களாகவும், பாசமானவர்களாகவும் வளர்ப்தோடு மட்டுமல்லாமல் கற்புநெறியில் தவறாமல் வளர்ப்பவர்களாகவும், கற்பு என்ற நற் பண்பிலே உங்கள் குழந்தைகளை மாற்றவும் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதை இந்த வேளையில் உணர்ந்து செயல்பட அன்போடு அழைக்கின்றேன்.**

**குழந்தைகளுக்கு பாலுணர்வை பற்றிய அறிவையும், அதன் முக்கியத்துவத்தையும், கட்டுப்பாடுகளையும், மீறினால் வருகின்ற அவமானங்களையும், இழுக்குகளைப் பற்றியும் கற்பிக்கின்ற கடமை பெற்றோர்களுடையது**

## கற்பு

கற்பைப் பற்றி நாம் நம் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுப்பதற்கு முன்பாக இந்தக் கற்பைப் பற்றிய தெளிவான அர்த்தங்களை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். கற்பு என்ற சொல்லுக்கு லத்தீன் மொழியில் “காஸ்துஸ்” என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதன் அர்த்தம் “தூய்மை” என்பதாகும். கத்தோலிக்கத் திருச்சபையை பொறுத்தவரையில் கற்பு என்பது பாலுணர்வுகளிலே கட்டுப்பாட்டோடு நெறிதவறாமல் வாழ்கின்ற ஒரு நிலை” தான் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

குழந்தைகளுக்கு பாலுணர்வை பற்றிய அறிவையும், அதன் முக்கியத்துவத்தையும், கட்டுப்பாடுகளையும், மீறினால் வருகின்ற அவமானங்களையும், இழுக்குகளைப் பற்றியும் கற்பிக்கின்ற கடமை பெற்றோர்களுடையது என்பதை கத்தோலிக்கப் பெற்றோர்களே உணர்ந்து கொண்டால் குழந்தைகள், தீய நெறியில் செல்ல வாய்ப்புகள் மிகவும் குறைவு.

ஒரு முதிர்ச்சியடைந்த எடுத்துக்காட்டான வாழ்வு வாழ்ந்து காட்டி, அவர்களுக்கு கற்பிக்கும் அறிவுரைதான் அவர்கள் கற்போடு வாழ்வதற்கு உதவி செய்யக்கூடியதாக அமையும். பயமோ, அச்சுறுத்தலோ, இருட்டடிப்போ, மிரட்டல்களோ, குழந்தைகளுக்கு நல்ல ஒரு வழிகாட்டியாக அமையாது.

கற்பைப் பற்றி திருச்சபையும், விவிலியமும் என்ன கூறுகிறது என்பதை இந்த இதழில் காண்போம்.

## திருவிவிலியம்

தொடக்க நூல் 1:27-28 கடவுள் மனிதனை தமது சாயிலில், தமது உருவிலே படைத்தார். ஆணும், பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கிப் பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் என்றார்.

### தொடக்க நூல் 2:21-25

“ஆகவே, ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச்செய்து, அவன் உறங்கும் பொழுது அவன் விலா எலும்பு ஒன்றை எடுத்துக்கொண்டு, எடுத்த இடத்தைச் சதையால் அடைத்தார்.

ஆண்டவராகிய கடவுள் தாம் மனிதனிடமிருந்து எடுத்த விலாவை ஒரு பெண்ணாக உருவாக்கி மனிதனிடம் அழைத்து வந்தார்.

அப்பொழுது மனிதன் “இதோ, இவளே என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள், ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால் இவள் பெண் என்று அழைக்கப்படுவாள்” என்றான். இதனால் கணவன் தன் தாய், தந்தையை விட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான், இருவரும் ஒரே உடலாய் இருப்பர்.

### தொடக்க நூல் 3:16

அவர் பெண்ணிடம் “உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன். வேதனையில் நீ குழந்தைகளைப் பெறுவாய். ஆயினும் உன் கணவன் மேல் நீ வேட்கை கொள்வாய். அவனோ உன்னை ஆள்வான்” என்றார்.

மேற்கண்ட விவிலிய வாக்கியங்கள் ஆணும் பெண்ணும் கடவுளின் படைப்பு என்றும், பாலுணர்வினால் தவறு ஏதும் இல்லை என்றும் உணர்த்துகின்றன.

பத்துக்கட்டளைகளில் இரண்டு கட்டளைகள் கற்புநெறியைப் பற்றி குறிப்பிடுகின்றன.

### விடுதலைப்பயணம் 20:14,17

“விபசாரம் செய்யாதே”

“பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே. பிறர் மனைவி, அடிமை, அடிமைப்பெண், மாடு, கழுதை அல்லது பிறர்க்குரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே”

### இணைச்சட்டம் 5:18,21

“விபசாரம் செய்யாதே”

“பிறர் மனைவியைக் காமுறாதே, பிறர் வீடு, நிலம், அடிமை, அடிமைப்பெண், மாடு, கழுதை அல்லது பிறர்க்குரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே”

இயேசு கிறிஸ்து மத்தேயு 5:27-28இல், விபச்சாரத்தில் ஈடுபடாமல் கற்பு நெறியோடு வாழ வேண்டுமென்று உணர்த்துகிறார்.

எபேசியர் 5:22 முதல் 33 வரை புனித பவுலடியார் கணவன் - மனைவி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும், கற்பு நெறி தவறாமல் வாழ வேண்டும் என்பதையும் குறிப்பிட்டு காட்டுகின்றார்.

எனவே விவிலியத்தை பொறுத்தமட்டில்

கடவுள் ஆணும் - பெண்ணுமாக அவர்களைப் படைத்து பாலுணர்வையும் படைத்தார்.

- ✲ பாலுணர்வுகள் இறைவனுக்கு உகந்த விதத்திலே கட்டுப்பாடுகளுக்குள் இருக்க வேண்டும் என்பதையும் அறிந்து கொள்கிறோம்.
- ✲ பாலுணர்வுகளுக்கு எதிரான பாவங்கள் இறைவனுக்கு உகந்த ஒரு வாழ்வு அல்ல, என்பதையும் நாம் உணர்ந்து கொள்வோம்.

## திருச்சபை

- ✲ புனித அகுஸ்தினுடைய வாழ்க்கை மிகவும் மோசமானதாக இருந்தபோதும், மனமாற்றத்திற்குப் பின் அவர் எழுதிய Confessions என்ற புத்தகத்தில் “கற்பை தான் இழந்ததால் கடவுளை விட்டு தூரப்-போனேன் என்றும், கற்போடு மனம்மாறி வாழ்ந்தபோது இறைவனுக்கு அருகில் வந்துவிட்டேன்” என்பதையும் குறிப்பிடுகிறார்.
- ✲ “அலுபியுஸ்” என்ற திருச்சபையின் தந்தை (உரோ 13:13-14) “பகலில் நடப்பதுபோல் மதிப்போடு நடந்து கொள்வோமாக, களியாட்டம், குடிவெறி, கூடா ஒழுக்கம், காமவெறி, சண்டைச் சச்சரவு ஆகியவற்றைத் தவிர்ப்போமாக”

தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள்” என்ற பகுதியைப் பற்றி தனது கருத்துக்களை பரிமாறும்பொழுது, கற்பைப் பற்றி கூறும்போது “நான் உடல் ரீதியாக சிந்திக்காமல் விண்ணக வாழ்வைப் பற்றியே சிந்திக்க ஆண்டவர் என்னை ஆசீர்வதிக்கின்றார்” என்று கூறுகிறார்.

புனித தாமஸ் அக்குவினாஸ் தன்னுடைய Summa Theligiae என்ற புத்தகத்தில் கற்பு என்ற நற்பண்பை பற்றி பேசும்பொழுது கற்பு பற்றிய இரு கருத்துக்களை குறிப்பிடுகிறார்...

1. கற்பு உலக ஆசைளையும், இச்சைகளையும் வெற்றி கொள்வதாக அமைகின்றது.
2. கற்பின் மூலமாக நாம் தூய்மையாளராக மாறி பரிசுத்தரான கடவுளோடு நம்மை ஐக்கியப்படுத்திக்கொள்கிறோம்.

எனவே, கற்பு நம்மை இவ்வுலக வாழ்வை மட்டும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்காமல் பேரின்ப வாழ்வையும் நாம் அடைய நமக்கு உதவியாய் இருக்கின்றது.

திருச்சபையின் புனிதர்களும், தந்தையர்களும் பின்வருவனவற்றை நமக்கு உணர்த்துகிறார்கள்...

1. நாம் அனைவரும் கற்போடு வாழ அழைக்கப்படுகின்றோம்.
2. கற்பு நெறி தவறுபவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதில்லை.
3. கற்போடு வாழும்போது இவ்வுலக மகிழ்ச்சி மட்டுமல்ல, பேரின்பமான விண்ணக வாழ்வையும் நாம் உடமையாக்கிக் கொள்ளலாம்.

## பெற்றோர்களின் கடமை

கடவுள் தம்முடைய அன்பின் மிகுதியால் பாலுணர்வை மனிதர்களுக்குக் கொடுத்திருக்கிறார். ஆனால் நவீன உலகும், மனித வாழ்விற்கு சற்றும் உதவாத தீய கலாச்சாரங்களும் இந்தப் பாலுறவையும், மானிட அன்பு வாழ்வையும் கொச்சைப்படுத்தி, சீர்குலைத்து வருகின்றன.

இந்தத் தருணத்தில் திருச்சபையும், விவிலியமும் நமக்குச் சுட்டிக்காட்டும் “கற்பு” என்னும் ஆயுதத்தை கையில் எடுத்தவர்களாக இந்தச் சமுதாயத்தில் நிகழும் தீமைகளை களைவதற்கு பெற்றோர்கள் உதவி செய்ய வேண்டும். பிஞ்சு மனதில் நஞ்சை விதைப்பவர்களிடம் இருந்து சிறு பிள்ளைகளை, குழந்தைகளை காக்க வேண்டும். அதற்கான ஒரு சில ஆலோசனைகள் பின் வருமாறு..

1. குழந்தைகளோடு தனிப்பட்ட விதமாக பேசி பாலுணர்வைப் பற்றிய அறிவை அவர்களுக்கு அன்போடு புகட்ட வேண்டும். அவர்களுக்கு இருக்கும் பயங்களையும், குழப்பங்களையும் அச்சங்களையும் போக்க முயற்சி செய்ய வேண்டும்.
2. எல்லா நற்பண்புகளுக்கும் மணிமகுடமாக விளங்குவது கற்பு என்பதை குழந்தைகளுக்கு உணர்த்த வேண்டும்.
3. அவர்களுடைய உடலிலே, மனதிலே ஏற்படும் மாற்றங்களுக்கு தகுந்த விளக்கம் அளித்து உண்மையை அறிந்து கொள்ள உதவி செய்ய வேண்டும்.
4. பெற்றோர்களும் குழந்தைகளின் எண்ணம், சொல், செயல்களைப் பற்றி விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். அவர்கள் தீய வழியில் சென்றபின் வருத்தப்படுவதால் பயன் ஒன்றுமில்லை.
5. கற்பு நெறி பற்றிய விஷயங்களைப் பற்றி வெளிப்படையாக பேசுவதற்கு பெற்றோர்கள் குழந்தைகளுடன் ஒரு நண்பன்போல பழக வேண்டும். இவ்வாறு நாம் வெளிப்படையாக பழகும்போது குழந்தைகளும் தயக்கமில்லாமல் நம்மோடு எல்லாவற்றையும் பகிர்ந்து நல்ல பழக்கங்களை கற்றுக்கொள்வார்கள்.
6. குழந்தைகள் கற்புக்கு எதிரான செயல்களை செய்யும்போது, தீய சொற்களை பேசும்போது பெற்றோர்கள் அதிகாரத்தோடு கண்டித்து திருத்த முன்வர வேண்டும்.

**இறுதியாக, கற்பைப் பொறுத்தமட்டில் குழந்தைகளுக்கு நாம் கற்பிக்க வேண்டியது, ‘பாலுறவின் மூலமாக நாம் இறைவனின் படைப்பினில் பங்கேற்கிறோம், இறைவனின் இந்தக் கொடையை நாம் அவருக்கு ஏற்றவாறு பயன்படுத்தும்போது ஆசீர்வாதத்தை பெறுகிறோம். ஒருவேளை நாம் கற்புநெறி தவறிவிட்டால் ஆண்டவர் நம்மை தண்டித்து விடுவார்’ இதை நம் பிள்ளைகள் உணர்ந்து கொண்டாலே போதும், அவர்கள் இறைவனுக்கு உகந்த பிள்ளைகளாக மாறி விடுகிறார்கள்.**

**பெண்ணிடம் ஆண் அடக்கமா?**

**பெண்களுக்கு உள்ளே ஆண்கள் அடக்கம் என்பது சில வார்த்தைகள் மூலம் புலப்படுகிறது.**

Female என்பதில் male அடக்கம்

Lady என்பதில் Lad அடக்கம்

Woman என்பதில் man அடக்கம்

She என்பதில் he அடக்கம்







அர்ப்பணிக்கப்பட்ட துறவிகள், கடவுளின் அன்புக்கும் கருணைக்கும் வழங்கும் சாட்சி வாழ்வு, உலகுக்கும் திருச்சபைக்கும் தேவைப்படுகின்றது, வாழ்வின் பல்வேறு நிலைகளில் இது கடவுளின் அடையாளமாக உள்ளது என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். கொட்டும் மழையிலும் குடைகளைப் பிடித்துக்கொண்டு வத்திக்கான புனித பேதுரு வளாகத்தில் நண்பகலில் நின்றுகொண்டிருந்த 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட விசுவாசிகளுக்கு மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ், அருள்சகோதரிகள் இல்லாத உலகத்தையோ, திருச்சபையையோ நினைத்துப் பார்க்க முடியாது என்று கூறினார். இம் மாசி மாதம் 02ஆம் திகதி சிறப்பிக்கப்பட்ட, அர்ப்பணிக்கப்பட்ட துறவிகள் தினத்தையொட்டி மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ், நீதியும் அமைதியும் நிறைந்த சமூகத்தின் வளர்ச்சிக்கும், இளையோரோடும் ஏழைகளோடும் இறைவாக்கைப் பகிர்ந்து கொள்வதிலும் துறவிகள் புளிக்காரமாய் உள்ளனர் எனவும் கூறினார்.

கடவுளின் கொடை வழியாக, கன்னிமை, ஏழ்மை, பணிவு ஆகிய வார்த்தைப்பாடுகளின் மூலம், இயேசுவின் அடிச்சுவடுகளைத் தங்கள் வாழ்வு முழுவதையும் கொடையாகக் கொடுப்பதன் அடையாளமாக இந்நாளில் நற்செய்தி விளக்குகின்றது என்றும், கடவுளுக்குத் தன்னையே காணிக்கையாக்குவது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் பொருந்தும் என்றும் கூறினார் திருத்தந்தை இயேசுவோடு, இயேசுவைப்போல, நாம் அனைவரும் நம் வாழ்வை, நம் குடும்பத்திலும், பணியிலும், திருச்சபைக்கான சேவையிலும், கருணைப் பணிகளிலும் தாராளமாக வழங்குவதற்கு அழைக்கப்பட்டுள்ளோம், இருந்தபோதிலும், இந்த அர்ப்பணம், வார்த்தைப்பாடுகளில் தங்களை முழுமையாக, கடவுளுக்கு மட்டுமே அர்ப்பணித்துள்ள துறவிகளால் சிறப்பாக வாழப்படுகின்றது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். இத்தகைய பல காரணங்களுக்காக, 2015ஆம் ஆண்டு துறவிகளுக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்பதையும் இறுதி உரையில் கூறினார்.

# வருகிற சித்திரை மாதம் திருத்தந்தையை இங்கிலாந்து அரசி சந்திப்பு



பிரிட்டன் அரசி எலிசபெத் அவர்கள், வருகிற ஏப்ரல் 3ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வத்திக்கானில் சந்திப்பார் என திருப்பீட பத்திரிகை அலுவலகம் அறிவித்துள்ளது. இத்தாலிய அரசுத்தலைவர் ஜார்ஜோ நாப்போலித்தானோ அவர்களின் அழைப்பின் பேரில் வருகை தரும் அரசி வத்திக்கானுக்கு வந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்திப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அரசி எலிசபெத் அவர்களுடன் எடின்பொர்க் பிரபும் வருகை தருவார் எனவும் அரசியின் பத்திரிகை அலுவலகச் செயலர் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

# திருத்தந்தையர் வழங்கும் செய்திகளை மக்கள் புரிந்துகொள்ளும்படி செய்வது, திருப்பீட ஊடகப் பணியாளர்களின் முக்கிய வேலை – அருள் பணியாளர் Federico Lombardi

திருத்தந்தையர் வழங்கும் செய்திகளை மக்கள் அறியும்படி செய்வது மட்டுமல்ல, அச்செய்திகளைத் தகுந்த வகையில் மக்கள் புரிந்துகொள்ளும்படி செய்வதும் திருச்சபைக்கென பணியாற்றும் ஊடகப் பணியாளர்களின் முக்கிய வேலை என்று திருப்பீடப் பேச்சாளர் அருள் பணியாளர் Federico Lombardi அவர்கள் கூறினார். தை 27ஆம் திகதி ஸ்பெயின் நாட்டின் Toledo நகரில் நடைபெற்ற விழாவில் அருள் பணியாளர் Lombardi அவர்களுக்கு சிறப்பு விருது ஒன்று வழங்கப்பட்டது.

இவ்விருது வழங்கும் விழாவின்போது "மூன்று திருத்தந்தையர், மூன்று தொடர்பாளர்கள் - என் அனுபவங்களும் எண்ணங்களும்" என்ற தலைப்பில் அருள் பணியாளர் Lombardi அவர்கள் வழங்கிய உரையில், கடந்த 20 ஆண்டுகள், திருத்தந்தையர் 2ஆம் ஜோன்போல், 16ஆம் பெனடிக்ட், பிரான்சிஸ் ஆகியோருடன் தான் ஆற்றிய பணிகளைக் குறித்துப் பேசினார். மூன்று திருத்தந்தையரும், தங்களுக்கே உரிய பாணியில் தொடர்பாளர்களாக வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர் என்பதை அருள் பணியாளர் Lombardi அவர்கள் விளக்கினார். தற்போது திருத்தந்தையாகப் பணியாற்றும் பிரான்சிஸ் அவர்கள், இவ்வுலகிற்கும் தனக்கும் உள்ள தூரத்தை அனைத்து வழிகளிலும் குறைத்துள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டிய அருள் பணியாளர் Lombardi அவர்கள், ஒவ்வொரு திருத்தந்தையும் தங்கள் உள்ளத்திலிருந்தே பேசி வந்துள்ளனர் என்றும், அவர்களுக்கு ஊடகத் துறையினர் எவ்வகையிலும் பயிற்சிகள் தருவதில்லை என்றும் விளக்கினார்.

ஸ்பானிய நாட்டின் Toledo நகரில் இயங்கி வரும் Radio Santa Maria என்ற வானொலி நிலையத்தின் 20 ஆண்டுகள் பணியையும், மறைமாவட்டத் தொலைக்காட்சி நிலையத்தின் 15 ஆண்டுகள் பணியையும் ஒட்டி, Toledo நகரில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# "கல்விப்பணி நாட்டின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டது" இயேசு சபை அதிபர்



கல்வி நிலையங்களை உருவாக்கி செயலாற்றுவதில் அனைத்து அமைப்பு முறைகளோடும் இணைந்து உழைக்க இயேசு சபை தயாராக இருப்பதாக அறிவித்தார். அத்துறவுச் சபையின் உலகத் தலைவர் அருள் பணியாளர் அடோல்'.போ நிக்கொலஸ். கிழக்கு திமோர் நாட்டின் தலைநகருக்கு அருகாமையிலுள்ள Kasait என்ற நகரில் புனித இக்னேசியஸ் லொயோலா கல்லூரியில் கல்வியாண்டை தொடக்கி வைத்து உரையாற்றிய இயேசு சபையின் உலகத் தலைவர் அருள் பணி நிக்கொலஸ் அவர்கள், இயேசு சபையினரின் எந்த ஒரு கல்வித்திட்டமும் அவர்களின் கல்வி பாரம்பரியத்தை தக்கவைக்கும் நோக்கம் கொண்டதல்ல, மாறாக நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கே. Kasait பகுதியில் இயேசு சபையினர் திட்டமிட்டுள்ள உயர்நிலைப்பள்ளி மற்றும் ஆசிரியர் பயிற்சிப்பள்ளிக்கானப் பணிகளை இயேசு சபை உலகத் தலைவர் தொடங்கி வைத்து விழாவில் கிழக்கு திமோரின் கல்வி அமைச்சர், நல்வாழ்வுத்துறை அமைச்சர், தலைநகர் திலி ஆயர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கடவுளின் பிள்ளைகளாகவும், கிறிஸ்துவின் சகோதர சகோதரிகளாகவும் வாழாமல் இருப்பதே உண்மையான வறுமை

நம் போதகராகிய கிறிஸ்துவைப்பின்பற்றி, நம் சகோதர சகோதரிகள் எதிர்கொள்ளும் ஏழ்மையை உணர்ந்து அதை நம்முடையதாக்கி, அதை அகற்றுவதற்கு நடைமுறை நடவடிக்கைகள் எடுப்பதற்கு கிறிஸ்தவர்களாகிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். வருகிற பங்குனி மாதம் 05ஆம் திகதி தொடங்கும் தவக்காலத்துக்கென இச்செவ்வாயன்று வெளியிடப்பட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தி, உலகில் மனிதர் எதிர்கொள்ளும் மூன்றுவிதமான வறுமை நிலைகளை விளக்கி அவற்றை அகற்றுவதில் கிறிஸ்தவர்களுக்கு இருக்கும் கடமையைச் சுட்டிக்காட்டியுள்ளது. ஆதவற்றநிலை, வறுமை போன்றது அல்ல என்றும், ஆதவற்றநிலை என்பது, விசுவாசமின்றி, ஆதரவின்றி, நம்பிக்கையின்றி இருக்கும் வறுமையே என்றும், பொருள் சார்ந்த, நன்னெறி சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த மூன்று வகையான கைவிடப்பட்ட ஆதரவற்ற நிலை உள்ளது என்றும் தனது தவக்காலச் செய்தியில் விளக்கியுள்ளார் திருத்தந்தை.

பொருள் சார்ந்த ஆதரவற்ற நிலையையே பொதுவாக வறுமை என்று சொல்கிறோம், இது மனித மாண்பு மறுக்கப்பட்டு, உணவு, நீர், நல்வாழ்வு, வேலை, கலாச்சார முறையில் வளர்தல் ஆகிய அடிப்படை உரிமைகளும் தேவைகளும் இல்லாமல் வாழ்தல் ஆகும். இவ்வாறு வாழ்வோருக்குத் திருச்சபை உதவுகின்றது என எடுத்துரைத்துள்ள திருத்தந்தை, அதிகாரமும், ஆடம்பரமும் பணமும் தெய்வச்சிலைகளாக மாறும்போது நியாயமாகப் பங்கிடப்பட வேண்டியதன் தேவைக்கான முன்னுரிமையை செல்வம் மேற்கொண்டு விடுகின்றது, எனவே நீதி, சமத்துவம், எளிமை, பகிர்வு ஆகியவற்றுக்கு நம் மனசாட்சிகள் மாற வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

தீய ஒழுக்கங்கள் மற்றும் பாவத்துக்கு அடிமையாவதை நன்னெறி சார்ந்த ஆதரவற்றநிலை என்று கூறியுள்ள திருத்தந்தை, மது, போதைப்பொருள், சூதாட்டம், இழிபொருள் இலக்கியங்கள் போன்றவற்றுக்கு அடிமையாகியுள்ளவர்கள் குறித்த கவலையையும், இவை ஏற்படுத்தும் கடும் விளைவுகளையும் வெளிப்படுத்தி கடவுள் மட்டுமே நம்மை மீட்டு விடுவிக்க வல்லவர் என்று கூறியுள்ளார்.

பொருளிலும், நன்னெறியிலும், ஆன்மீகத்திலும் வறுமையாய் வாழ்வோர்க்கு, கிறிஸ்துவில் நம் ஒவ்வொருவரையும் அணைத்துக்கொள்ளத் தயாராக இருக்கும் நம் தந்தையாம் கடவுளின் கருணைநிறை அன்பின் நற்செய்திக்கு திருச்சபை சாட்சி வழங்குமாறு கேட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடவுளின் பிள்ளைகளாகவும், கிறிஸ்துவின் சகோதர சகோதரிகளாகவும் வாழாமல் இருப்பதே உண்மையான வறுமை என்றும் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் ஆன்மீகம் சார்ந்த ஏழ்மையை அகற்றுவதற்கு நற்செய்தியே உண்மையான மாற்று மருந்து என்றும் கூறியுள்ளார்.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு அவர் உங்களுக்காக ஏழையானார் (2 கொரி 8:9) என்ற தலைப்பில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தவக்காலத்துக்கான செய்தி அமைந்துள்ள.

# அவுஸ்திரேலிய தடுப்புக்காவலில் குழந்தைகள்

அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரியுள்ள குழந்தைகள் கட்டாயமாக தடுத்துவைக்கப்படுவது குறித்து விசாரணை நடத்துவதற்கு அந்நாட்டின் மனித உரிமைகள் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் சிறு பிள்ளைகள் என்ற போதிலும் அவர்களின் நடமாட்டச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும், முக்கியமான வளர்ச்சிப் பருவத்தை, கம்பி வேலிகளுக்கு இடையில் மிகுந்த கஷ்டமான சூழ்நிலையில் இவர்களில் பலர் செலவழிக்க வேண்டியுள்ளது என்றும் கூறியுள்ளார் அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் பேராசிரியர் Gillian Tiggs.

தஞ்சம் கோரி வருபவர்களின் பிள்ளைகள் சிறிது காலம் தடுத்துவைக்கப்பட்டு அவர்களின் அடையாளம் உடல் நலம் போன்றவை உறுதிசெய்யப்படுவது பன்னாட்டுச் சட்டங்களை மீறுவதாக உள்ளது என பேராசிரியர் Triggs குறிப்பிட்டுள்ளார். தஞ்சம் கோரி வருவோரின் பிள்ளைகளை கட்டாயமாக தடுத்துவைப்பது என்பது அவுஸ்திரேலியாவுக்கு இருக்கின்ற மனித உரிமை கடப்பாடுகளுக்கு பொருந்தாத விடயமாக உள்ளது, என்றும், பிள்ளைகளை நெடுங்காலம் தடுப்புக்காவல் முகாம்களில் வாழவைப்பது அவர்களுக்கு மோசமான உளநலப் பாதிப்புகளை ஏற்படுத்தும் ஆபத்து உள்ளது என்றும் இவ்வாணையம் 2004ஆம் ஆண்டிலேயே சுட்டிக்காட்டியிருந்தது. அவுஸ்திரேலியாவின் குடியேற்றதாரர் தடுப்புக்காவல் மையங்களில் மொத்தத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டின் மனித உரிமைகள் ஆணையம் விபரங்களை வெளியிட்டுள்ளது.

இதில் நூற்றுக்கும் அதிகமான பிள்ளைகள் அவுஸ்திரேலியாவுக்கு வெளியில் உள்ள நவுரு தீவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

## 01ம் பக்கம் – நம்பிக்கை மூலமே...

அமைதி, சமாதானம் ஆகிய கொடைகளை இறைவன் வழங்கவும் இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும், நல்லதோர் எதிர்காலத்தை அமைப்பதற்கு எடுத்துவரும் முயற்சிகளுக்கு இறைவன் உதவி செய்ய வேண்டும் என தான் செபிப்பதாக கூறிய திருத்தந்தை அவர்கள் தனது செபத்தில் இலங்கை மக்களுக்கு சிறப்பான இடம் இருப்பதாகவும் உறுதி கூறினார். இலங்கை நாட்டை அன்னை மரியிடம் அர்ப்பணித்ததன் 75ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இத்தாலி வாழ் இலங்கை மக்களாகிய நீங்கள் இன்று (8/2) புனித பேதுரு ஆலய வளாகத்தில் ஒன்றிணைந்துள்ளீர்கள். உங்களின் தேவைகளுக்கேற்ப குறிப்பாக வாழ்வில் பிரச்சினைகள் நிறைந்து, அதனை சுமையாக உணரும் போது அன்னை மரியிடம் தயக்கமின்றி அண்டிச் செல்லுங்கள். இலங்கையில் இயற்கை அமைப்பு அதன் அழகு இவற்றால் அந்நாடு இந்திய பெருங்கடலின் முத்து என அழைக்கப்படுகிறது. இந்த முத்து சிற்பியின் கண்ணீரில் இருந்து உருவாவதாகச் சொல்லப்படுகிறது ஆயினும் அண்மை ஆண்டுகளில் உள்நாட்டு போர்களில் பலர் இழப்புகளை இழந்து கண்ணீர் வடித்துள்ளனர் எனவும் கூறினார் திருத்தந்தை.

இந்நிகழ்வில் 12,000ற்கும் மேற்பட்ட இலங்கை வாழ் மக்களும் கலந்து சிறப்பித்தனர். கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்கையுடன் அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன, தயாஸ்ரீ திசேரா ஆகியோரும் பிரதி அமைச்சர் சரத் குமார குணரத்தன ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 01ம் பக்கம் – மாதா T.V

தமிழ்க் கத்தோலிக்கரை இணைக்கும் பாலமாக அமைகின்றது. இளையோருக்கு, குழந்தைகளுக்கு என, தனித்தனி நிகழ்ச்சிகளை வழங்கவிருப்பதுடன், அன்றையப் புனிதர், திருப்பாடல்கள், விழா நல்வாழ்த்துக்கள், இறையும் இயற்கையும், திருப்பலிகள், திருச்சபை, சட்டம், அருளடையாளங்கள், மரியன்னை பற்றிய தெளிவுகள் என பல்வேறு தலைப்புகளில் நல்ல நல்ல நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு திட்டமிட்டுள்ளனர் இதன் ஒருங்கிணைப்பாளர்கள். மாதா டி.வியில் இடம்பெறும் நிகழ்ச்சிகளை இணையத்தளத்தின் ஊடாகவும் நேரடியாகக் காணலாம்.

## கீரைகளின் மருத்துவப் பயன்கள்

### மணத்தக்காளி கீரை

- ★ இது வாய்ப்புண், வயிற்றுப் புண்ணை அகற்றும் தன்மை கொண்டது. உடலில் உள்ள வெப்பத்தைத் தணித்து குளிர்ச்சியை ஏற்படுத்தும். கூட்டு செய்து சாப்பிடலாம்.
- ★ உடம்பில் ஏற்படும் வெட்டைச் சூடு, காங்கை கணைச் சூடு ஆகியவற்றைப் போக்குவதில் பெரிதும் துணை புரிவது மணத்தக்காளி கீரை. இது உடலுக்கு குளிர்ச்சியை தந்து வெப்பநிலையைத் துரிதப்படுத்தும்.
- ★ குடல் அழற்சியை ஆற்றுவதில் அருமருந்தாக விளங்குவது மணத்தக்காளி.
- ★ சிலருக்கு வாயின் இருபுறமும் மைனாப் புண் ஏற்படும். வாயிலும் புண் ஏற்படும். ஆங்கில மருத்துவத்தில் ரிபோபிளேவின், பீகாம்ப்ளக்ஸை இதற்கு மருந்தாகக் கொடுப்பார்கள்.
- ★ வாயில் புண் உள்ளவர்கள் ஒரு கை மணத்தக்காளிக் கீரையைப் பறித்து நன்கு கழுவி வெறும் வாயில் போட்டு மென்று ஐந்து நிமிடம் சாறு இருக்கும்படி வைத்திருந்தால் அன்றே வாய்ப்புண் ஓடிப்போய் விடும். அவ்வளவு எளிய நல்ல மருத்துவம் இது.
- ★ நீண்ட நாள் சளியினால் இருமல் தொல்லையா? தேங்காய்ப் பாலில் பனங்கற்கண்டைப் பொடி பண்ணி போட்டு அத்துடன் மணத்தக்காளிக் கீரையை அரைத்து சாறைப் பிழிந்து குடித்தால் விரைவில் குணம் அடையலாம்.
- ★ மணத்தக்காளிக் கீரை சாப்பிட்டால் வாய்ப்புண், வயிற்றுப் புண் ஏற்படாது.
- ★ மணத்தக்காளிக் கீரை திப்பலி, மிளகு, தேன், வெல்லம் இவற்றுடன் உட்கொள்ளக்கூடாது.
- ★ விட்டமின் பி1, பி2 மற்றும் விட்டமின் ஏ ரிபோப்ளாவின் கொண்டது மணத்தக்காளி.
- ★ உடல் சூட்டை குறைக்கும் மணத்தக்காளி காயத்தையும் ஆற்றக் கூடியது.
- ★ வயிற்றில் பூச்சிகள் உருவாகாமல் தடுக்கும்

### மணத்தக்காளி கூட்டு

கீரையைக் கழுவிச் சுத்தம் செய்யவும். சிறு பருப்பை வேக வைத்து எடுக்கவும், தேங்காயுடன் சீரகம், ஒரு மிளகாய் வற்றல், ஒரு பல் பூண்டு வைத்து அரைக்கவும். அடுப்பில் பாத்திரத்தில் தண்ணீர் வைத்துச் சிறிதளவு வெற்றிலைக்குப் போடும் சுண்ணாம்பு கலக்கிக் கொதிக்க விடவும். கொதிக்கும் நீரில் கழுவி நறுக்கிய கீரையைப் போடவும், கீரை வெந்தவுடன் தேங்காய் விழுது சேர்க்கவும். சீரக வாசனைப் போனவுடன் வெந்துள்ள பருப்பை போட்டு உப்பு சேர்த்துக் கிண்டி இறக்கி கடுகு தாளித்துக் கொட்டி பறிமாறவும்.

## 04ம் பக்கம் – இளைஞர்களின் வழிகாட்டி...

ஆண்டவர் சிலர் வழியாக துணைவந்து வெற்றி தருகிறார். மோசேவுக்கு கிடைத்த உற்சாக குளுகோஸ் அவரின் வாழ்வையே மாற்றியது. அதன் பலனாக எகிப்தில் அடிமைகளாகக் கிடந்த மக்களின் வாழ்வும் மாறியது.

உலகில் பல சாதனைகளைப் படைத்த இளைஞர்களின் வெற்றியின் பின்புலத்தை அறிந்தோம் என்றால், அவர்களின் வெற்றிக்குப் பலரின் தூண்டுதலும், உற்சாக வார்த்தைகளும் காரணமாக அமைந்திருக்கும். அவ்வூக்கமூட்டும் வார்த்தைகள், அவர்களின் பெற்றோர் அல்லது ஆசிரியர் அல்லது நண்பர் வழியாகக் கிடைத்திருக்கும். அல்லது தாங்களே தங்கள் உள்ளத்தில் கொண்டிருந்த என்றும் அணையாத உள் உணர்வுகள் வழியாகவோ பெற்றிருப்பர். இந்த உள்ளார்ந்த உணர்வை இறை அருள் அல்லது இறைத்தூண்டுதல் என்றும் கருதலாம். வாழ்வையே மாற்றும் ஆற்றல் கொண்ட இறைத்தூண்டுதல் என்னும் மருந்தை அனைவரும் பெற்றால் வாழ்வ எவ்வளவு இனியதாக இருக்கும்.

இளம் வயதிலேயே தங்களுக்குள் இருந்த உற்சாகம் என்னும் உள்ளார்ந்த உணர்வால் வரலாற்றில் பல்வேறு துறைகளில் அழியாத முத்திரைகளைப் பதித்தவர்களில் சிலரைக் காண்போம்.

ஆர்பர்ட் டென்சன் 18வது வயதில் தன்னுடைய சிறப்பான முதல் இலக்கியத்தைப் படைத்திருந்தார். பிரான்சு வீரன் நெப்போலியன் இத்தாலியைப் பிடித்தபோது அவனுக்கு வயது 25. மிகப் பெரும் எழுத்தாளர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் பிரயன் மற்றும் இரபேல் என்பவர்கள் ஆவர். இவர்கள் இருவரும் தங்கள் 31வது வயதில் இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றனர். யோயே தன்னுடைய 39 வயதில் தன் இலக்கியப் பணியை முடித்திருந்தார். அறிவியல் மேதை நியூட்டன் தன்னுடைய 25 வயதிற்கு முன்னரே தன்னுடைய உயர்ந்த கண்டுபிடிப்புகளைச் செய்திருந்தார். மோட்சரட் தன்னடைய "இசைப்படைப்பை"ச் செய்திருந்தார். நம் மீட்பரான இயேசுவும் உலகை மாற்றி அமைக்க முற்பட்டபோது அவருக்கு வயது 30-தான். உலகச் சாதனைகளைப் படைக்கக் கூடியவர்களில் பலர் 40 வயதுகூட நிறைந்தவர் கிடையாது.

இப்படிச் சாதனைப் படைக்கக் கூடிய இளைஞர்கள் அனைவருக்கும் "பாராட்டு" என்னும் "உற்சாக குளுக்கோஸ்" தேவைப்படுகின்றது. ஆனால், ஒரு வரலாற்று உண்மையை அறிய வேண்டும். சாதனைப் படைத்தவர்கள் அனைவருக்கும் "உற்சாக குளுகோஸ்" கிடைக்கவில்லை என்பதே அது. எனவே, உற்சாக குளுக்கோசுக்கு முரணான நிலை ஏற்படும் என்றால், பாராட்டைப் பெற முடியாத இளைஞர்கள் இயேசுவைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும். காரணம் இயேசு பலரின் விமர்சனங்களுக்கும் எதிர்ப்புக்கும் உட்பட்டாலும், இறை விருப்பத்தை நிறைவேற்றுவதில் உறுதியாகச் செயல்பட்டார். எனவே, பலரின் விமர்சனங்களைக்கூட வெற்றிப் படிக்கற்களாக மாற்றி நடைபோடக் கற்றுக்கொண்டால், நம்பிக்கையோடு பயணம் மேற்கொண்டு வெற்றிபெற முடியும். எதிர்காலம் என்ற விடிவெள்ளியை நோக்கிப் பயணம் மேற்கொண்டு "நாளை" என்ற சூரியனை சந்தித்தால் எல்லார் வாழ்விலும் ஒளியேற்ற முடியும், வழிகாட்டவும் முடியும்.

ஆ. எதையும் விரயமாக்கவில்லை

கரைக்கு இழுத்துவரப்பட்ட மீனை இளைஞர் தோபியா என்ன செய்ய வேண்டுமென்று இரபேல் வழிகாட்டுகிறார். "மீனைக் கீறி அதன் பித்தப்பை, இதயம், ஈரல் ஆகியவற்றை எடுத்து வைத்துக்கொள்ளும், ஏனெனில் அவை மருந்தாகப் பயன்படும். ஆனால் குடலை எறிந்து விடும்" என்று தோபியாவுக்கு அறிவுரை கூறுகின்றார் (6:4). என்ன நடக்கப் போகின்றது என்பதை முன்கூட்டியே அறிந்திருந்த வானதூதர். இயற்கையாகக் கிடைக்கும் பொருள்கள் இறைவனின் குணப்படுத்தும் தன்மையைக் கொண்டிருக்கின்றன என்பதைக் காட்டும் விதமாக "அவை மருந்தாகப் பயன்படும்" என்கிறார். இதன் மூலம் பின்னர் நடைபெற இருக்கும் நிகழ்ச்சியை மறைமுகமாக முன்கூட்டியே சுட்டிக்காட்டுகிறார். இது செமித்திய மொழி இலக்கியங்களில் காணப்படும் சிறப்பான இலக்கியக் கூறு எனலாம்.

மீனின் ஒரு பகுதியைச் சுட்டி உணவாக அருந்திவிட்டு, மற்றொரு பகுதியை உப்பிட்டுப் பாதுகாக்கின்றனர். குடல் இருக்கும் மீன் கெட்டுப்போகும் என்பதை அறிந்த அசரியா என்ற பெயர்கொண்ட வானதூதர் தோபியாவுக்கு அறிவுரை கூறி, மீனின் குடலை கீழே எறிந்து விடக் கூறுகிறார். சாப்பிட்டு இருவரும் ஆற்றங்கரை ஓரத்திலேயே உறங்கினர். மீண்டும் மறுநாள் பயணத்தைத் தொடர்ந்து மேதியாவை நோக்கிச் சென்றனர்.

வானதூதரின் அறிவுரை தோபியாவுக்கு வினோதமாக இருந்திருக்க வேண்டும். எனவே தான், பயணத்தின்போது வானதூதரிடமே தனக்கு எழும் சந்தேகத்தைத் தீர்க்க எண்ணி கேள்வியை எழுப்பினார், "சகோதரர் அசரியா, மீனின் இதயம், ஈரல், பித்தப்பை ஆகியவை எதற்கு மருந்தாகப் பயன்படும்?" மருந்தாகப் பயன்படும் மீனின் பாகங்களை சேர்த்து சுமந்து வந்த இளைஞனின் கேள்விக்கு வானதூதரும் பதில் கூறுகிறார். "பேயாவது தீய ஆவியாவது பிடித்திருக்கும் ஒருவர் முன் மீனின் இதயத்தையும் ஈரலையும் புகையச் செய்தால், அவர்கள் முற்றிலும் நலம் பெறுவார்கள். இனி ஒருபோதும் அது அவர்களை அண்டாது. வெண்புள்ளிகள் உள்ள மனிதரின் கண்களில் பித்தப்பையைத் தடவி ஊதினால் அவர்கள் பார்வை பெறுவார்கள் (6:8-9).

உண்மையில் அசரியாவின் பதிலைக் கேட்ட தோபியா உள்ளத்தில் மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும். காரணம் பித்தப்பையைக் கொண்டு தன் தந்தையின் கண்பார்வையைச் சரிசெய்ய முடியும் என்று அறிந்து மகிழ்ச்சி அடைந்திருப்பார். எனவே தந்தை தனக்கு கட்டளையிட்டதை நிறைவேற்றிவிட்டு விரைவில் நினிவே நகருக்குத் திரும்பி வரவேண்டுமென்று எண்ணியிருக்க வேண்டும்.

பயனற்றது என்ற எதையும் தூக்கி எறிந்து விடக்கூடாது. மாறாக, எது பயன் அளிக்கின்றது என்று கண்டு மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். மதிநுட்பமாய் செயல்பட வழிகாட்டுதலும் கிடைத்தது. வானதூதரைப் போன்று உண்மை நண்பர் "தீமையை நன்மையாக மாற்ற" (சீஞா 20:9) உதவுகின்றனர். "போர்க் காலத்திலும் எதிரியிடமிருந்து காப்பாற்ற" (சீ.ஞா 37:5) துணை வருகின்றனர். இப்படிப்பட்ட நண்பர்கள் உடன் பிறவா சகோதரர்கள் போன்றோர். அவர்கள் பணத்தையும் ஒபீர் நாட்டுப் பொன்னையும் விட மேலானவர்கள் (காண் சீஞா 6:15,7:18). இவர்கள் "ஆயிரத்தில் ஒருவராக உதவிடும் ஆலோசகராகவும்" (சீஞா 6:5), "பாதுகாப்பான புகலிடமாகவும்" (சீஞா 6:14) "நலம் அளிக்கும் நல் மருந்தாகவும்" (சீஞா 6:17) இருப்பவர்கள்.

இந்த நல்ல நட்பு வேண்டுமென்றால் ஆண்டவருக்கு அஞ்ச வேண்டும் (சீஞா 6:16ல) தோபியாவைப் பொறுத்த மட்டில் இந்த நல்ல நட்பு கிடைத்தது. காரணம் அவர் தந்தை தோபித்துவைப் போன்ற கடவுளுக்கு அஞ்சி நடந்து கடவுளின் கட்டளையைக் கடைப்பிடித்து வந்தார்.

(தொடரும்)

## 07ம் பக்கம் – தேவத்தை பசிலிக்காவும்....

இவ்வாறு கர்தினால் தோமஸ் குரே ஆண்டகை தேவத்தை பூமியை ஒரு புனித பூமியாக, ஆன்மீக நடுநிலையமாக விளங்க வேண்டுமென்றே விரும்பினார். மரியன்னையின் பாதுகாவலை அண்டி வரும் மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படைத் தேவைகளையும் அவர் பூர்த்தி செய்து தர பிரயாசைப்பட்டுழைத்தார். அதன்படி பசிலிக்காவின் சுற்றுப்புறத்தை அழகுபடுத்தி வடிவமைத்தார். நிழல் தரும் பல மரங்களை நட்டு பேணி வளர்த்தார். கடந்த 50 வருடங்களாக ஏற்பட்ட பல முன்னேற்றங்களையும் நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. குளமும் அதைச் சூழ்ந்த இயற்கை வனப்பும், புதிதாக அமைக்கப்பட்ட அழகான வேலியும் பசிலிக்கா பூமியை மேலும் அலங்கரிக்கின்றன என்றால் மிகையாகாது.

அதுமாத்திரமல்ல கிறிஸ்தவர்களைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளும் முகமாக இங்கே ஒரு சிறிய நூதனசாலையும் காணப்படுகின்றது. பசிலிக்காவிற்கு வருபவர்கள் இவற்றைப் பார்வையிட்டு பயனடைய வேண்டுமென்பதே எமது விருப்பம்.

இவற்றை விட இந்தப் புண்ணிய பூமியின் ஆன்மீக அழகை மெருகூட்டும் வண்ணம் எவ்வேளையிலும் செபிக்கும் தபசு மடங்கள் சில உள. அதாவது ஏழைக் கிளேராவின் கன்னியர் மடமும், செபமாலைக் கன்னியர் மடமும் இங்கிருப்பதற்கான முக்கிய காரணமே தேவத்தைக்கு வரும் பக்தர்களுக்காக இராப்பகலாய் செபிப்பதே ஆகும். சிறிய காலத்திற்கு தங்கி நிற்க விரும்பும் பக்தர்களுக்காக சிறிய வீடுகளும், ஞான ஒடுக்கம், மறைக் கருத்தரங்குகள் போன்றவற்றிற்காக ஞான ஒடுக்க இல்லமும், ஜூபிலி மண்டபமும் இங்கே அமைந்துள்ளன.

மேலும் பசிலிக்காவை தரிசிக்க வருவோருக்கு இலங்கைத் திருச்சபை வரலாற்றை எடுத்துரைக்கும் உலோகச் சித்திரங்களின் அழகே தனி. போர்த்துக்கேயர் கால கிறிஸ்தவம், மறைப்பரப்பாளர்களின் வருகை, நாட்டின் கலை, கலாச்சார, நாகரீக மற்றும் அரசியலில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு, 2ஆம் உலக யுத்தத்தின்போது கத்தோலிக்கரின் தேசப்பற்று நாட்டிற்கு பாதுகாப்பை வழங்கிய மரியன்னைக்கு நன்றியாக கட்டப்பட்ட பசிலிக்கா என்று பல சித்திர சிற்பங்கள் அடங்குகின்றன.

சிறுவர்களின் கல்வி மற்றும் வருங்காலம் பற்றிய அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கர்தினால் குரே ஆண்டகை, பசிலிக்காவை கட்டும் பணியிலும் அவர்களைப் பங்குபெறச் செய்தார். அவர்களை மரியன்னைக்கு அருகில் கொண்டு வரும் நோக்கில் "சிறுவர் தினத்தை" ஆரம்பித்தார். அவர்கள் இலங்கைத் திருச்சபை வரலாற்றை அறிந்து கொள்ள இச்சித்திரங்கள் உதவும் என்பதில் ஐயமில்லை. அதேவேளை பெரியவர்களுக்கும் இது கைக்கொடுக்கும் மேலும் இப்படியான வரலாற்றுச் சித்திரங்கள் அடங்கிய தேவாலயமாக இலங்கையில் பசிலிக்காவே காணப்படுகின்றது.

மேலும் பசிலிக்காவின் விசேட அம்சமாக, அதன் கீழ்க் கோயிலில் காணப்படும் இறையடியார் கர்தினால் தோமஸ் குரே ஆண்டகையின் கல்லறை இக்கல்லறைக்கு முன்பாகச் செபிக்கும் பலரும் உள்ர். அவரின் பரிந்துரையை மன்றாடுகின்றனர். அவரை அருளாளர் என அறிவிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

# ஹினிதுமை தவக்கால யாத்திரை செல்வோம் வாரீர் – 2014

## 65ஆவது யாத்திரை கால ஒழுங்குகள்



**தலைப்பு : " அவர் தம் காயங்களால் நமக்கு குணமும், நிறைவாழ்வும் கிடைத்துள்ளது. " [எசாயா 53:05]**

மார்ச் 02 : ஞாயிறு மாலை 3.00 மணிக்கு கொடியேற்றம் கல்வாரிமலைத் திரு நாளும் மற்றும் யாத்திரைக் காலம் ஆரம்பம் : காலி மறைமாவட்டத்தின் குரு முதல்வர் அதிவண. சார்ல்ஸ் ஹேவாவசம் அடிகளாரின் தலைமையில்.

மார்ச் 05 : விபூதிப் புதன் - மாலை 4.00 மணிக்குத் திருப்பலி.

### தவக்கால வழிப்பாடுகள்

திங்கள் முதல் புதன் வரை திருப்பலி
காலை 7.00 மணிக்கு

### யாத்திரைக்கால ஒழுங்குகள்

**வியாழக்கிழமைகளில்**

- ★ மாலை 3.00 மணிக்குப் பொதுச் சிலுவைப்பாதையுடன் 12 ஆம் நிலையில் திருப்பலி
- ★ இரவு 7.00 மணிக்குத் திருமணித்தியாலமும் திவ்விய நற்கருணை வழிப்பாடும்

**வெள்ளிக்கிழமைகளிலும் சனிக்கிழமைகளிலும்**

- ★ காலை 6.00 மணிக்கு ஆலயத்தில் திருப்பலி
- ★ காலை 7.00 மணிக்குப் பொதுச் சிலுவைப்பாதையுடன் 12 ஆம் நிலையில் - **திருப்பலி – தமிழ்**
- ★ காலை 7.30 மணிக்குப் பொதுச் சிலுவைப்பாதையுடன் 12 ஆம் நிலையில் - **திருப்பலி – சிங்களம்**
- ★ நண்பகல் 12.00 மணிக்கு ஆலயத்தில் திருப்பலி
- ★ மாலை 3.00 மணிக்குப் பொதுச் சிலுவைப்பாதையுடன் 12 ஆம் நிலையில் திருப்பலி
- ★ இரவு 7.00 மணிக்குத் திருமணித்தியாலமும் திவ்விய நற்கருணை வழிப்பாடும். - **சிங்களம்**
- ★ இரவு 8.00 மணிக்குத் திருமணித்தியாலமும் திவ்விய நற்கருணை வழிப்பாடும். **– தமிழ்**

**ஞாயிறுகளில்**

- ★ காலை 6.00 மணிக்குத் திருப்பலி
- ★ காலை 8.00 மணிக்குத் திருப்பலி
- ★ காலை 7.00 மணிக்கு திருப்பலி - தமிழ்
- ★ பி.ப. 12.00 மணிக்குத் திருப்பலி

### புனித வாரத்தில்...

**ஏப்ரல் 13 : குருத்துவ ஞாயிறு –** காலை 7.30 மணிக்குத் திருப்பலி
காலி மறைமாவட்ட ஆயர் மேதகு இரேமன் கிங்ஸிலி விக்கிரமசிங்க ஆண்டகை மற்றும் அதிவண. அருட்பணி சார்ல்ஸ் ஹேவாவசம் குருமுதல்வர்.

**ஏப்ரல் 17 : பெரிய வியாழன் –** மாலை 5.00 மணிக்கு வழிப்பாடு
அருட்பணி. மைக்கல் இராஜேந்திரம் - (இயக்குனர் கரிட்டாஸ் செட்கோல்) தலைமையில் நடைபெறும்.

**ஏப்ரல் 18 : பெரிய வெள்ளி –** பி.ப. 2.00 மணிக்குப் பொதுச் சிலுவைப்பாதை
அருட்பணி. கமிலஸ் குரே (தேசிய குருமடம்)
- பி.ப. 3.00 மணிக்கு திருப்பாடுகளில் ஆராதனை (கல்வாரித் திருத்தலத்தில்)
காலி மறைமாவட்ட ஆயர் மேதகு இரேமன் கிங்ஸிலி விக்கிரமசிங்க ஆண்டகையின் தலைமையின் கீழ் நடைபெறும்.

**ஏப்ரல் 19 : அல்லேலூயா சனிக்கிழமை –** இரவு 10.00 மணிக்குத் திருப்பலி
அருட்பணி. இராஜ ரட்ணபிரிய (இயக்குனர் இறையியல் கல்வியகம் - ஹல்பாதோட்ட)

**ஏப்ரல் 20 : உயிர்த்த ஞாயிறு –** காலை 8.00 மணிக்குத் திருப்பலி

**ஏப்ரல் 26 – ஞாயிற்றுக்கிழமை யாத்திரைக் காலத்தின் இறுதிநாள்**
- காலை 8.00 மணிக்கு நன்றித் திருப்பலி

### திருத்தலத்தை வந்தடையும் பாதைகள்

கொழும்பு → கொட்டாவ → தென் இலங்கை கடுகதி நெடுஞ்சாலை → பின்னதுவ → உடுகம → ஹினிதும.

கொழும்பு → காலி → உடுகம → ஹினிதும.

கொழும்பு → ஹிக்கடுவ → ஹல்பாத்தோட்டை → நாகொடை → உடுகம → ஹினிதும.

கொழும்பு → தென் இலங்கை கடுகதி நெடுஞ்சாலை → குருந்துகஹஹதக்ம → அல்பிட்டிய → தல்கஸ்வல → மாப்பலகம → உடுகம → ஹினிதும.

கொழும்பு → களுத்துரை → மத்துகம → பெலவத்த →

பிட்டிகல → தல்கஸ்வல → மாப்பலகம → உடுகம → ஹினிதும.
நெலுவ → தவலம → ஹினிதும.
பிட்டிகல → ஹபரகட → ஹினிதும.

மாத்தரை → அக்குரஸ்ஸ → மல்புதனெல்ல → தவலம → ஹினிதும.

இரத்தினபுரி → பெல்மடுல்ல → இறக்குவானை → தெனியாய → மல்புதனெல்ல → தவலம → ஹினிதும.

### சிறப்பு ஆராதனைகள்...

மார்ச் 8 - 9 : வெல்ல வீதி பங்கு தந்தை வணக்கத்துக்குரிய டெரன்ஸ் போதியாபதுகே அடிகளாரின் தலைமையில் சிலுவைப்பாதை, திருமணித்தியாலம், திவ்விய நற்கருணை வழிப்பாடும் நடைபெறும்.

மார்ச் 14- 16 : யாத்திரைக் காலத்தின் 2 ஆம் வாரம் தமிழ் பக்த்தர்களுக்கான விசேட மாலை மெழுகுவர்த்தி ஆராதனை கிரான்பாஸ் சங்கம் (24 வருடம்)

மார்ச் 17-18 : காலி மறைமாவட்ட இளைஞர்களுக்கான தவக்கால ஞானொடுக்கம்

மார்ச் 21-23 :
தேவ அழைத்தலுக்கான தியானம் - அருட்பணி. சம்பத் விலேகொட மற்றும் சிறிய குருமடம்.
- தவக்கால சனிக்கிழமை தியான வழிபாடு தமிழ் - புனித அந்தோனியார் இளைஞர் முன்னணி, புதுச்செட்டித்தெரு கத்தோலிக்க முன்னணி

மார்ச் 28 : காலி மறைமாவட்ட அருட்சகோதரிகளுக்கான தியான வழிபாடு

ஏப்ரல் 5 : மாலை ஆராதனை தமிழ் - சிங்களம் - இராஜகிரிய தியானக்குழு

### உங்கள் கவனத்திற்கு

இத் திருத்தலம் ஆண்டவரின் திருப்பாடுகள் மற்றும் உயிர்ப்பை எமக்கு நினைவூட்டுவதனால்...

தயவு செய்து -

- ★ திருத்தலத்தின்போது ஒப்புரவு அருட்சாதனத்தை பெற்றுக்கொள்ளவும்.
- ★ யாத்திரைக் காலத்தில் இறுதி நாட்களில் ஏற்படும் சனநெரிசலைத் தவிர்த்துக் கொள்ள முதல் வாரங்களில் யாத்திரை மேற்கொள்ளவும்.
- ★ திருத்தலத்திற்கு மதுபானம், சங்கீத மற்றும் விளையாட்டுப் உபகரணங்கள் போன்றவற்றைக் கொண்டுவருவதை தவிர்க்கவும்.
- ★ கிறிஸ்தவரல்லாதோர் பெரும்பான்மையாக வாழும் இக் கிராமத்தில் அமைந்துள்ள இத்திருத்தலத்தின் புனிதத்துவம் கெடாத வகையில், முன்மாதிரிகையான விதத்தில் நடந்து கொள்ளவும்.
- ★ உங்கள் தங்குமிட வசதிகளுக்கு மாலை 6.00 மணிக்கு முன்னராக வந்து அலுவலகத்தில் பதிவு செய்து கொளளவும்.

தொலைபேசி இல : 091 - 7901520

ஆண்டவர் அருள் பெற அனைவரும் வருக!


**கல்வாரித் திருத்தலம்,**
அருட் திரு. இரணத் இந்திக என்டனி அடிகளார்,

ஹினிதும :
திருத்தலப் பரிபாலகர்.
தொலைபேசி : 091 - 3912285, 077 - 7148856
E-mail : fr.indika@gmail.com
Website: www.hinidumashrine.galledicese.org


**தவக்காலத்தின் மட்டும் மல்லாது வருட முழுவதும் ஹினிதும கல்வாரித் திருத்தலம் யாத்திரிகளுக்கு திறந்திருக்கும் என மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.**

(Q 13N7709)


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை பீ.சீ.ஜீ எட்ரிச் றொட்ரிக்கோ, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்